பககஙகள: பன்னரண்டு+சிறப்புமலர்

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 01 செவ்வாய்க்கிழமை (13-04-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 140

# கிழக்கிலிருந்து கருணா சகாக்களுடன் தப்பினார்!

## மட்டு -அம்பாறைப் பிரதேசங்கள் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில்

மட்டக்களப்பு,ஏப்ரல்13

**மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கருணா குழுவினரின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளின் வசம் வந்துள்ளன. இதனையடுத்து கருணா குழுவினரின் செயற்பாடுகள் அனைத்தும் முடிவுக்கு வந்துவிட்டன. தனது தீவிர ஆதரவாளர்கள் ஒரு சிலருடன் கருணா கிழக்கு மாகாணத்தை விட்டுத் தப்பியோடிவிட்டார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.**

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் மீண்டும் முழுமையாக விடுதலைப் புலிகளின் படையணிகளின் கட்டுப்பாட்டில் நேற்று வந்துவிட்டன.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை விடுதலைப் புலிகளின் படையணிகள் கஞ்சிகுடிச்சாறுப் பகுதியைக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பின் தமது நடவடிக்கையைத் தொடர்ந்தனர்.



படையணிகள் முன்னேற ஞாயிறு இரவோடு இரவாக கருணா தனது தீவிர விசுவாசிகள் சுமார் நூறு பேரு

(12ஆம் பக்கம் பார்க்க)

### கண்காணிப்புக் குழுவிடம் சரணடையும் திட்டத்தைக் கைவிட்டு

# இராணுவ உளவுப் படையின் உதவியுடன் கருணா கொழும்புக்குத் தப்பி ஓட்டம்?

மட்டக்களப்பு,ஏப்.13

கருணாவும் அவரது நெருங்கிய ஆதரவாளர்கள் இருவரும் கொழும்புக் குத் தப்பிச் சென்றிருப்பதாக ஊர்ஜிதப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

'தேனகம்' அரசியற் தலைமையகம் உட்பட மட்டக்களப்பின் முழுப் பகுதியும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ள நிலையில் கருணா கொழும்புக்குத் தப்பி ஓடி இருப்பதை சில வெளிநாட்டு செய்தி ஏஜென்ஸிகள் உறுதிப்படுத்தியிருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்ததை அடுத்து ஸ்ரீலங்கா அரசிடம் அல்லது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் சரணடைவது தொடர்பாக உயர்மட்ட இரகசியப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், இராணுவ உளவுப் படையினர் முந்திக் கொண்டு கருணாவுக்குப் பாதுகாப்பு அளித்து அவரைக் கொழும்புக்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

## 18 போராளிகள் திருமலையில் சரணடைவு

மட்டக்களப்பு,ஏப்.13

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் மீட்பு அணிகள், கருணா குழுவுக்கு எதிரான தாக்குதல ஆரம்பித்ததையடுத்து, அங்கிருந்து தப்பிச் சென்ற 18 பேர் திருகோணமலையின நோர்வேத் தீவுப்பகுதியில் கடற்படையினரிடம் சரணடைந்துள்ளனர்.

சரணடைந்த 18 பேரும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு

(12ஆம் பக்கம் பார்க்க)

### நாளையும் உதயன்

*புத்தாண்டு நாளான இன்று உதயன் பணியாளர்களுக்கு விடுமுறை தினமாகும்.*

*எனினும் வழமைபோல் நாளை புதன்கிழமை (14. 04. 2004) உதயன் வெளிவருவான்.*

- நிர்வாகத்தினர்.

### புதுவருடச் சிறப்புமலர்

இன்றைய உதயனுடன் வர்ணப் பக்கங்கள் அடங்கிய புதுவருடச் சிறப்புமலர் வெளியாகின்றது. அதனையும் சேர்த்துப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## சபாநாயகர் பதவிக்கு

சபாநாயகர் பதவிக்கு அரசுக்கட்சியான சுதந்திரக் கூட்டமைப்பு ஒருவரை நிறுத்துகிறது. எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய முன்னணியும் ஒருவரை நிறுத்துகிறது.

முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்கவை அரச கட்சியும், முன்னாள் அமைச்சர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டாரவை எதிர்க்கட்சியும் நிறுத்துகின்றன.

லொக்கு பண்டாரவை சபாநாயகராகத் தெரிவு செய்வதற்கு ஆதரவு வழங்குமாறு 22 எம்.பிக்களைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவுக்கு அரசு தஞ்சம் வழங்கும்

கொழும்பு,ஏப்.13

கருணா கேட்டுக்கொண்டால் அரசு, அவருக்குப் பாதுகாப்பு அளிக்கும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்.

கருணாவுக்கு பாதுகாப்பளித்து தஞ்சம் வழங்கும் விடயத்தில் சர்வதேச மனிதாபிமான விதிகளின் கீழ் அரசு செயற்படும். மனிதாபிமான அடிப்படையில் அது பற்றி பரிசீலிக்கப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

எனினும், கருணா தங்களுடன் தொடர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கருணா வெளிநாட்டுக்கு தப்பிப் போகக் கூடும்

### விடுவிக்கப்பட்ட பெண் போராளி தகவல்

லண்டன்,ஏப்.13

கருணா தற்போது வெளிநாட்டில் நிற்கலாம். சிலவேளை, இன்று கொழும்பில் தங்கி, நின்றுவிட்டு சில தினங்களின் பின்னர் வெளிநாட்டுக்குச் செல்லலாம்.

கடந்த 41 நாள்களாக கருணாவின் பிடியிலிருந்து மீட்கப்பட்ட விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்டங்களின் மகளிர் நிர்வாகப் பொறுப்பாளர் வேணுகா இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

பி.பி.ஸியின் தமிழோசைக்கு நேற்றிரவு

(12ஆம் பக்கம் பார்க்க)

## கதிரவெளிப் பகுதி மோதலில் 3 போராளிகள் வீரச்சாவு!

கிளிநொச்சி,ஏப்.13

தாயகத்திலிருந்து கருணாவை அப்புறப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

கருணா குழுவினருடன் கடந்த 9 ஆம் திகதி, மட்டக்களப்பு - அம்பாறை கதிரவெளிப் பகுதியில் ஏற்பட்ட மோதலின்போதே இவர்கள் வீரச்சாவடைந்தனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

லெப்டினன்ட் பொதிகைத்தேவன் என்று அழைக்கப்படும் பதுளை வீதி, கித்துள்குளம், கரடியனாறு,

(12ஆம் பக்கம் பார்க்க)




# தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியவற்றை நிறைவேற்ற முன்வந்தால் அரசுக்கு ஆதரவு

### தமிழரசுக் கட்சி எம்.பி.சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.13

இலங்கைத் தமிழரசுக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ள விடயங்களை ஜனாதிபதி நடைமுறைப்படுத்த முன்வரும் பட்சத்தில், புதிய அரசுக்கு நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும், வெளியேயும் ஆதரவு வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை, செட்டிகுளம் பிரதேசசெயலகப் பிரிவிலுள்ள வீரபுரத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இப்படிக் கூறினார். அவர்மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கு-கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் நீண்டகாலப்பிரச்சினையை அரசியல் ரீதியாகத் தீர்ப்பதற்கு இதய சுத்தியுடன் செயற்பட ஜனாதிபதி முன் வரவேண்டும். எந்தக்கட்சி ஆட்சி

(12ஆம் பக்கம் பார்க்க)

## லாரா மீண்டும் சாதனை!



கொழும்பு,ஏப்.13

'டெஸ்ட்' கிரிக்கெட் வரலாற்றில் ஒருவர் பெற்ற ஆகக்கூடுதலான ஓட்டமாக, ஆட்டமிழக்காது 400 ஓட்டங்களைப் பெற்று மேற்கு இந்தியத் தீவுகள் அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் பிரயன் லாரா புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியிருக்கிறார்.

மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையே இங்கிலாந்தின் அண்டிகுவா மைதானத்தில் இடம்பெற்றுவரும் நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்றுத் திங்கட்கிழமை இந்தச் சாதனையை பிரயன் லாரா நிலைநாட்டினார்.

இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இரண்டு தடவைகள் முச்சதங்களைக் குவித்த இரண்டாவது வீரராகவும் பிரயன் லாரா உள்ளார். இதுவரை சேர் டொனால்ட் பிரட்மன் மட்டுமே இரண்டு தடவைகள் முச்சதங்களைப் பெற்றிருந்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

# சுதந்திரக் கூட்டமைப்பில் விரிசல் பெரிதாகிறது அமைச்சுப் பதவிகளில் ஜே.வி.பி. விடாப்பிடி!

கொழும்பு,ஏப்.13

அமைச்சுப் பதவிகள் காரணமாக சுதந்திரக்கூட்டமைப்பில் ஏற்பட்டுள்ள விரிசல் பெரிதாகி வருகிறது.

சுதந்திரக் கூட்டமைப்பை உருவாக்கிய போது காணப்பட்ட இணக்கப்பாட்டின்படி செயற்படாவிட்டால் [illegible] எதையும் ஏற்றுக்கொள்வதில்லை என்று ஜே.வி.பி.தீர்மானித்துள்ளது.

விவசாயம், நீர்ப்பாசனம், காணி போன்றவற்றை உள்ளடக்கும் மகாவலி அதிகாரசபை - கலாசாரம் மற்றும் தேசியவளம் போன்றவற்றை உள்ளடக்கும் தேசிய திரைப்படக்கூட்டுத்தாபனம் என்பவற்றைத் தமக்கு வழங்கியுள்ள அமைச்சுகளின் கீழ் கொண்டுவராவிட்டால் எந்த அமைச்சையும் ஏற்கப்போவதில்லை என ஜே.வி.பி.உறுதிபட தெரிவித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற அமைச்சர்களின் பதவியேற்பு வைபவத்தை ஜே.வி.பி.பகிஷ்கரித்தமைக்கு அடிப்படைக்காரணமே, இதுதான் என்று ஜே.வி.பி.வட்டாரங்கள் தெரிவித்தன.

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசத்தின் விடிவுக்காக அர்ப்பணிப்புடன் உழைப்போம்!

## புத்தாண்டுச் செய்தியில் தமிழரசுக்கட்சிச் செயலர் மாவை



யாழ்ப்பாணம்,ஏப்.13

தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பை ஆணையாக ஏற்றுத் தமிழ்த் தேசத்தின் சுதந்திரத்திற்கும், மக்களின் விடிவிற்கும் தொடர்ந்து எம்மை அர்ப்பணித்து உழைப்போம் என இப்புத்தாண்டிலும் திடசங் கற்பம் கொள்வோம்.

தமிழரசுக்கட்சிச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2004 சித்திரைத் திங்களில் புத்தாண்டு பிறக்கிறது. இது ஆண்டு தோறும் வரும் நிகழ்ச்சிதான். தை பிறந்தால் வழிபிறக்குமென்று தைப் பொங்கல் திருநாளை கொண்டாடிய தமிழ் மக்கள் இன்று புத்தாண்டிலும் பொங்கி மகிழ்ந்து நல்லதே நடக்க வேண்டுமென்ற நம்பிக்கையுடன் காலடி எடுத்து வைக்கிறார்கள்.

பங்குனித் திங்களில் இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் நம் தமிழ்தேச மக் கள் சரித்திரச் சாதனை படைத்திருக்கிறார்கள்.

ஒன்றுபட்ட நம் தமிழ்தேசமக்கள் "எம் நிலம் எமக்கு வேண்டும், எம் வீடுகளுக்கு நாம் போகவேண்டும், ஆக்கிரமிப்பாளர்களே வெளியேறிவிடுங்கள்" எனத் தங்கள் சுதந்திரத் தாகததை, விடுதலை வேடகையை வாககுசசடடில, வடடுசசினனததுல பொறிதது வடடு 'தமழரசு' காண்போம் என எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

நம் தமிழ்த்தேசமெனும் தாயகக் கோட்பாட்டைச் சென்ற தேர்தலிலும் மக்கள் தீர்ப்பினால் உறுதிப்படுத்தியுள்ளனர். அதனை நிலைநாட்ட தமிழழ விடுதலைப் புலிகள் படையணிகள் கிழக்கிலும் தடம் பதித்து தம் நிலைகளைப் பலப்படுத்தி நிற்கும் செய்திகள் புத்தாண்டில் புதுத்தெம்பையூட்டி நிற்கின்றன.

நாம் எதிர்வு கூறியது போலவே தென்னிலங்கையில் ஆட்சியமைப்போர் பேரினவாத சக்திகளின் நெருக்குவாரத்தில் அல்லாடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், நாம் எம் கருமத்தில், நம் கடமையில் கண்ணாயிருப்போம். தேர்தலில் தமிழ்த் தேசமக்கள் தெளிவாக தங்கள் இலட்சியத்தை எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

"தமிழ்த் தேசிய இனத்திற்குரித்தான சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுவதே" எம்முன் னுள்ள அரசியற் கடமையாகும்.

அழிந்து போன எம்மக்கள் வாழ்வை மீளக்கட்டியெழுப்பிட மனிதாபிமான அடிப்படையில் சர்வதேச நாடுகள் உவந்தளித்த நிதி ஆதாரங்களைப் பயன்படுத்திட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கிடுவதே எம் முதற்பணியாகும். எம் தமிழ் மக்களின் தீர்ப்பை ஆணை யாக ஏறறுத தமழத தேசததன சுதநதரததறகும, மககளன விடிவறகும தொடாநதும எமமை அர்ப்பணித்து உழைப்போம் என இப்புத்தாண்டிலும் திடசங்கற்பம்கொள்ளுவோம்.

இப்புத்தாண்டிலும் புதிய நம்பிக்கையுடன் பொங்கிக்குதூகலித்து நிற்கும் எம் தமிழ் மக்களுடன் இணைந்து புத்தாண்டு வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொள்வதில் மகிழ்ச்சியடை கின்றோம் - என்றுள்ளது. (எ-3)

# தேசிய ஒற்றுமை, சமாதானத்துக்கு ஒன்றிணைந்து செயற்படுவோம்!

## புத்தாண்டுச் செய்தியில் ஜனாதிபதி



நாட்டின் ஒற்றுமைக்காகவும், சமாதானத்திற்காகவும் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்; அதன் அவசியத்தைப் புத்தாண்டு வலியுறுத்துகிறது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது சிங்கள, தமிழ் புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜனாதிபதி தமது செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஆரம்பத்தில் சிங்கள-தமிழ் மக்கள் மாத்திரம் கொண்டாடிய புத்தாண்டு இன்று நாடு முழுவதிலுமுள்ள மக்களது புத்தாண்டாக கொண்டாடப்படுகிறது. முன்னெப்போதுமில்லாத அளவுக்கு தேசிய உணர்வுகள் விருத்தி பெற்றதொரு காலப்பகுதியில் நாட்டுமக்கள் இம்முறை புதுவருடத்தைக் கொண்டாடுகிறார்கள்.

நாட்டில் நிரந்தரமானதும் கௌரவமானதுமான சமாதானம் ஏற்படுத் தப்படல் வேண்டும் என்பதும் மக்களின் அபிலாஷைகளில் பிரதானமாகும்.

சமாதானம், சகவாழ்வு, ஐக்கியம் மற்றும் சமத்துவம் என்பவற்றுடன் நாட்டிலிலுள்ள அனைத்து இன, மத மக்களும் வாழ்வதற்கு வழியமைத்துக் கொடுப்பதே எமது பிரதான நோக்கமாக இருக்கவேண்டும். குறிப்பாக கலாசார உரிமைகள் என்ற அம்சத்தில் வேறுபடும் சிங்கள தமிழ் மக்களும் தேசிய ஒற்றுமைக்காகவும் நிரந்தர சமாதானத்திற்காகவும் இணைந்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை இப்புத்தாண்டு வலியுறுத்துகின்றது.

தவறுகளை மன்னிப்பதும் தவறுகளுக்காய் மன்னிப்புக் கேட்பதும் இப்புத்தாண்டு தினத்தில் எமது மக்கள் தொன்றுதொட்டு கடைப்பிடித்து வரும் நற்பழக்கமாகும்.

இவ்வாறான அனைத்து கருத்து வேறுபாடுகளையும் மனக்கசப்புக்களையும் மறந்துவிட்டு எமது தாய் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றுபடுவோம்.

உங்கள் அனைவருக்கும் மங்களகரமான புத்தாண்டு வாழ்த்துக்கள்.

- இப்படி ஜனாதிபதி தனது செய்தியில் தெரிவித்திருக்கின்றார். (எ-க)

# சகோதரத்துவத்துடன் வாழப் பிரார்த்திப்போம்

## பிரதமர் வாழ்த்துச் செய்தி

இலங்கை வாழ் மக்களாகிய அனைவரும் சகோதரத்துவத்துடன் சமாதானமாக வாழப் பிரார்த்திப்போம் என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தமது புத்தாண்டு நல்வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். பிரதமர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடு முழுதிலும் ஒரு புது மாற்றம் ஏற்படவும், நாட்டில் அனைவரும் சமாதானமாகவும் ஒற்றுமையாகவும், ஜாதி, மதம், பாராமல் ஒருவருக்கொருவர் சகோதரத்துவத்துடனும் வாழவும், பிறக்கும் புத்தாண்டில் கடவுளைப் பிரார்த்திப்போம்.

- இப்படி பிரதமர் தெரிவித்துள்ளார். (எ-க)

# சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சியை ஒருபோதும் ஆதரிக்க மாட்டோம்!

## மலையக முன்னணித் தலைவர் சந்திரசேகரன்

தலவாக்கலை,ஏப்.13

இனப்பிரச்சினை சம்பந்தமான எந்த வித தெளிவான நிலைப்பாடுமே இல் லாத மக்கள் விடுதலை முன்னணி அங்கம் வகிக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு ஆதர வளிப்பது என்ற பேச்சுக்கே இட மில்லை என்பதை மீண்டும் மலை யக மக்கள் முன்னணியின் தலை வர் பெ.சந்திரசேகரன் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட டுள்ள பத்திரிகைச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

நாம் கட்சி தாவப் போகிறோம். என்று மக்கள் மத்தியில் சிலர் பிழை யான கருத்துக்களையும் வதந்திகளை யும் பரப்பி வருகின்றார்கள்.

வெற்றி பெறுகின்ற கட்சிகளின் காலடிகளிலெல்லாம் பதவிக்காக விழு வது என்பது கேவலமான அரசியல் சுயநலமாகும்.

கொள்கைக்காக எமக்கு வாக்க ளித்த மக்களுக்கு துரோகம் செய் கின்ற அநாகரிகமான அரசியல் சந் தர்ப்பவாதமாகவும் அது அமையும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்ட மைப்பில் இணைவது பற்றி மலை யக மக்கள் முன்னணி எந்த சந்தர்ப் பத்திலுமே ஆராயவோ, முடிவெடுக் கவோ இல்லை. வடக்கு - கிழக்குக்கு வெளியே சிறுபான்மை மக்கள் வாழு கின்ற இடங்களில் எல்லாம் ஐக்கிய தேசிய முன்னணிக்கே சிறுபான்மை மக்கள் தமது வாக்குக்களை அளித் துள்ளார்கள்.

தற்போதைய அரசு ஸ்திரமற்ற தாகவே இருக்கும், இனப்பிரச்சினை தீர்வு முயற்சியும் சரியான இலக்கை நோக்கி நகராது. இந்த நிலை இருக்கும்போது அந்த ஆட்சிக்கு துணைபோவது என்பது முட்டாள்தன மான தற்கொலைக்கு ஒப்பானதாகவே இருக்கும்.

எனவே, எமக்கு எதிராக திட்ட மிட்டு பரப்பப்படுகின்ற பிரசாரங்களை எவரும் நம்ப வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மலையக மக்கள் முன்னணி - மலையக மக்களின் அரசியல் நிலை மைகள் பற்றிய, வடக்கு-கிழக்கு சிறு பான்மை மக்கள் பற்றிய - தேசிய அரசியலில் தனது நிலைப்பாடு பற் றிய - கொள்கைகளிலிருந்து என் றுமே மாறாது.

- இப்படி சந்திரசேகரன் குறிப் பிட்டார். (எ-8)

# பொருளாதார முன்னேற்றம் கருதி ஒன்றுபட்டு அயராது உழைக்குக!

## புதிய நிதியமைச்சர் அழைப்பு

கண்டி,ஏப்.13

நாட்டின் பொருளாதார முன்னேற் றத்தையும், உணவு உற்பத்தியின் தன்னிறைவையும் கருத்தில் கொண்டு அரசியல்வாதிகள், அரச ஊழியர்கள், விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர் கள் கடுமையாக உழைக்க வேண் டும். அப்போது தான் இந்த நாடு வளம் பெறும்.

- இவ்வாறு நிதியமைச்சர் கலா நிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்த தாவது:-

நாம் தேர்தல் சமயத்தில் வெளி யிட்ட கொள்கை விளக்கத்தில் குறிப் பிட்ட அனைத்தையும் நிறைவேற்று வோம். அரச ஊழியரின் சம்பளத்தை திஸ்ஸ தெய்வேந்திராவின் அறிக்கைப் படி அதிகரிக்க நடவடிக்கை எடுப் போம்.

அதேபோல் வறிய மக்களுக்கு உதவும் திட்டங்களையும் நாம் நிறை வேற்றவுள்ளோம். நாடு சகல துறை களிலும் வளம் பெற்றுபொருளாதா ரத் துறையில் முன்னேற்றம் காண வேண்டும். இதன்பொருட்டு விவசாயி கள், கைத்தொழிலாளர்கள், உற்பத் தியாளர்கள், அரச துறையினர் உட் படப் பலரும் கடுமையாக உழைக்க வேண்டும். கைத்தொழிலாளர்கள், உற் பத்தியாளர்கள் தமது நாட்டில் உள்ள வளங்களை முழுமையாகப் பயன் படுத்த முன்வரவேண்டும்.

அபிவிருத்தி ஊழல் இடம்பெற் றால் சிறிதளவு முன்னேற்றத்தையும் காண முடியாது.

சிங்கப்பூரில் ஊழல் புரிவோரைக் கண்டறியும் நிறுவனம் ஒன்று உள் ளது. இதன்மூலம் எமது நாட்டில் ஊழல் புரிந்தோரைக் கண்டுபிடித்து தண்டனை வழங்கவுள்ளோம். - என்றார் (எ-8)



# நாடு முன்னேறுவதற்கு சமாதானமே முதல் முக்கியம்

## பிரதமர் ராஜபக்ஷ பேட்டி

கொழும்பு,ஏப்.13

சமாதானத்தை தோற்றுவிப்பதே எமது முதல் முக்கிய விடயமாகும். நாடு முன்னேறுவதற்கு முதலில் அமைதி தோற்றுவிக்கப்பட வேண்டும். எனவே, நாம் தமிழீழ விடுதலைப் புலி களுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற் குக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

- இவ்வாறு புதிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஒரு பேட்டியில் கூறியிருக் கின்றார். ஆங்கில பத்திரிகையொன் றுக்கு பிரதமர் ராஜபக்ஷ அளித் துள்ள பேட்டியில் தெரிவித்துள்ள சில முக்கிய கருத்துக்கள் பின்வருமாறு:-

### தொழில் வாய்ப்பும் சம்பள உயர்வும்

நாம் நாட்டிலுள்ள தொழிற்சங்கங் கள் எல்லாவற்றுடனும் பேச்சுக்கள் ஆரம்பிக்க இருக்கின்றோம். நாட்டின் தற்போதைய நிலைமையை அவர்க ளுக்கு விளக்குவோம்.

நாம் வாக்களித்த அனைத்தையும் இரவோடு இரவாக நிறைவேற்றிவிட முடியாது. என்றாலும் எமது சொல் லைக் காப்பாற்றுவோம். அதேசமயம் எமக்குள்ள கஷ்டங்களைத் தொழிற் சங்கங்களுக்கு விளக்குவோம் எனவே, அவர்கள் எமக்குள்ள கஷ்டங்களை உணர்ந்து தாமதங்களை சகித்துக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கின் றோம்.

நாட்டில் ஊழல்களை ஒழித்துக் கட்ட நாம் பாடுபடுவோம். சமீபகால மாக உலகில் மிகமோசமாக ஊழ லால் பாதிக்கப்பட்ட நாடு இலங்கை தான் என்ற நிலைக்கு வந்துவிட்டது. இது நாட்டின் பெயருக்கு இழுக்காகும். குற்றச்செயல்கள் தொடர்பான விட யங்களிலும் கவனம் செலுத்தப்படும். குற்றங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றன. அவசியம் இந்த விட யம் கவனிக்கப்பட வேண்டும்.

நமது நாடு அடிப்படையில் ஒரு விவசாய நாடு. இத்துறையை நாம் முன்னேற்ற முயலவேண்டும். வெகு காலமாகவே சில விடயங்களில் நமது விவசாயிகள் கவனிக்கப்படா மலிருந்து வருகிறார்கள். அவர்களுக்கு உரமானியங்கள் வழங்குவதற்கும், உற் பத்தியை அதிகரிக்கும் விதத்தில் அவர் களின் வாழ்க்கையை உயர்த்துவதற் கும் நாம் திட்டமிட்டு வருகின்றோம். விலைவாசிகளை குறைக்கவேண்டும். அது இப்பொழுது மிக உச்சத்தில் இருக்கின்றது. அவர்களுக்கு நியா யம் வழங்கவேண்டும். நாம் இன்று நுகரும் பொருள்களில அதிகமானவை யும் அவர்களால் உற்பத்தி செய்யப் படுபவைகளே.

கட்டுமாணப் பணிகளில் எமது பொறியியலாளர்களை அதிகமாகப் பயன்படுத்துவதற்கு நாம் யோசித்து வருகின்றோம். வெளிநாட்டு தொழில் நுட்பங்களைப் பெற்றுக்கொண்டாலும் உள்நாட்டு வளங்களை நாம் பயன் படுத்தியாக வேண்டும். இதன் மூலம் வேலையற்றோருக்கு வேலைவாய்ப்புக் களை உருவாக்க முடியும். தொழில் வாய்ப்புகளை உருவாக்க வேண்டி யது எமது கடமை.

### கதிர்காமர் ஒரு கனவான்

பிரதமர் பதவிக்கு லக்ஷ்மன் கதிர் காமர் பெயரும் முன்மொழியப்பட்டி ருந்த வேளையில் நிலைமைகளை எவ்வாறு சமாளித்தீர்கள்.

அவை எல்லாமே ஜனாதிபதி யின் தீர்மானத்திற்குட்பட்டவை. அவா தான் எமது கட்சியின் தலைவர். அவரே இறுதி முடிவு எடுப்பவர். கதிர்காமர் எல்லாவற்றையும் நல்ல மனதுடன் ஏற்றுக்கொண்டார். அவர் ஒரு கனவான்.

தெளிவான பெரும்பான்மை கிடைத் திராத நிலையில் அரசியல் நிர்ணய சபையொன்றை எவ்வாறு உருவாக் கப் போகிறீர்கள்?

இதனை இரண்டு வகையாக அணுக முடியும். ஒன்று: அரசியல் நிர்ணய சபையை உருவாக்க நாடாளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள் வது. துரதிர்ஷ்ட வசமாக நாடாளுமன் றில் எமக்கு இந்த ஆதரவு இல்லை. எனவே, மாற்றுவழி என்ன? நாடாளு மன்றில் சாதாரண பெரும்பான்மை யைப் பெற்றுக்கொள்வதன் மூலம் மக்கள் முன்சென்று சர்வஜன வாக் கெடுப்பு ஒன்றை நாடுவதாகும். இது சாத்தியம் என்றே கருதுகின்றேன்.

அரசமைப்பை மாற்றி அமைக்க நாம் உறுதியாகத் தீர்மானித்துள்ளோம். நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறைமையையும் ஒழிப்ப தற்கு நாம் தீர்மானித்துள்ளோம். இந்த முறையின் கீழ் ஒருதனிமனிதருக்கு அளவுக்கு அதிகமான அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. 1994 இல் நாம் இதற்கு வாக்குறுதியளித்தோம். அதனை இப்போது நிறைவேற்றப் போகிறோம். 4மாதங்களில் இதை நாம் செய்வோம். இதற்கான வழி முறைகளை நாம் வகுத்து வருகின் றோம்.

### புதிய அரசமைப்பும் இனப்பிரச்சினையும்

புதிய அரசமைப்பில் இனப்பிரச் சினைக்குத் தீர்வு காணப்படுமா?

நிச்சயமாக, இனப்பிரச்சினைத் தீர்வுககான அம்சங்கள் புதிய அரசி யல் திட்டத்தில் இடம்பெற்றிருக்கும். தேர்தல் முறையை மாற்றி அமைக் கும் அம்சங்களும் இடம்பெற்றிருக் கும். நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை மட்டுமல்ல, தீர்க் கப்படாதிருந்து வரும் சகல பிரச்சி னைகளையும் தீர்த்துவைக்க நடவ

(12 ஆம் பக்கம் பாக்க்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

## தாரண வருடம் நல்லது தருமா?

காலநதி ஓட்டத்தில் பழையன கழிதலும், புதியன பிறத்தலும் புதிய விடயங்களல்ல. அவை வழிவழியாய் வந்த நிகழ்வுகள்; வழிவழியாய் வந்த வாழ்வியல் அனுபவங்கள்.

அந்த வகையில், சுழன்று கொண்டிருக்கும் காலச் சக்கரத்தில் மற்றொரு புத்தாண்டு பிறந்திருக்கின்றது.

சித்திரைப்பானு கழியப் பிறந்த சுபானு வருடம் இன்று மாலையோடு விடைபெற தரணியிலேயே அடியெடுத்து வைக்கிறாள் தாரண எனும் நல்லாள். சித்திரைப் புத்தாண்டில் இத்தரை மீது கால்பதிக்கும் தாரண, தரப்போகும் நன்மைகள்தான் என்ன?

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த நம் தமிழர்கள், சித்திரையில் புத்தாண்டைக் கொண்டாடுவது அர்த்த புஷ்டியான விடயமாகும்.

சூரியன் நேர்கிழக்கே உதித்து நடுப்பகலில் நேர் உச்சிக்கு வந்து மாலையில் நேர் மேற்கிலே அஸ்தமிக்கும் நாள்கள் இரண்டு. அவை விஷு என்று பெயர் பெறும். அவற்றுள் சூரியன் மேட இராசிக்குள் பிரவேசிக்கும் மேஷ விஷு நாள்தான் சித்திரைப் புத்தாண்டு என்று தமிழர்களால் கொண்டாடப்படுகின்றது.

காலதேவனின் இயக்கத்தை வருடத்துக்கு ஆறு பருவங்களாக வகுத்தவன் தமிழன். அதில் சித்திரைப் புத்தாண்டுப் பிறப்புடன் ஆரம்பமாகும் வசந்தருது முக்கியமானது. முன்பனி, பின்பனி கழிந்து, இளவேனில் காலத்தில் மலர்கள் வாரிச் சொரிந்து மணம் பரப்ப, இயற்கையே பூரிதுப் பிரவகித்து நிற்கும் காலம் இது. இயற்கை அன்னையின் பெருஞ் சொத்தான தாவர வர்க்கங்கள் - விருட்சங்கள - புத்தாடை போர்த்து, புதுமணம் கமழ்ந்து - புதுப்பொலவும் புதுத்தோற்றமும் கொண்டு காட்சியளிக்க, தரணி எங்கும் புத்தெழுச்சி வெளிப்பட்டு நிற்கும். அந்தப் புத்தூக்கம் தரும் காலத்தையே ஆண்டின் தோற்றமாகக் கொண்டு புத்தாண்டாக்கி வருட வசந்தத்தை எதிர்பார்த்து வாழ்வியலை ஆரம்பிக்கின்றான் தமிழன்.

அந்த வகையில், பிறக்கின்ற புத்தாண்டில் அமைதியையும், சமாதானத்தையும் கௌரவத்துடன் கூடிய செளபாக்கிய வாழ்வையும், வாழ்வியல் திருப்தியையும் ஈழத் தமிழனும் எதிர்பார்ப்பது தப்பில்லை அல்லவா?

எதிர்கால நல்வாழ்வை ஏக்கத்தோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஈழத் தமிழர்களுக்கு - ஏன் இலங்கைத் தீவு மக்கள் அனைவருக்கும் - இந்தத் தாரண வருடம் தரப்போகும் வாழ்வுதான் என்ன? - இதுதான் இன்றைய நன்னாளிலே நம் அனைவர் மத்தியிலும் எழும் கேள்வி.

புலர்வது புத்தாண்டு என்ற புதுமை உணர்வே பொதுவாக மக்களுக்குப் புத்துணர்ச்சியையும், புத்தூக்கத்தையும், புதுத்தெம்பையும், புதிய உற்சாகத்தையும், புதிய உத்வேகத்தையும் தரும்.

ஆனால், தாரண வருடப் பிறப்பு அத்தகைய புத்தெழுச்சியைத் தரவில்லை. மாறாக நாட்டின் சூழல், சந்தர்ப்பங்கள் மக்கள் மனதில் ஐயுறவையும், அச்சத்தையும் நல்லது நடக்குமா என்ற சந்தேகத்தையுமே தந்து நிற்கின்றது.

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை ஒருபுறம் மகிழ்வும் மறுபுறம் ஏக்கமும், விசனமும் அவர்கள் மனதை நிறைத்து ஆட்டிப் படைக்கின்ற காலம் இது.

ஈழத் தமிழர்களின் விடுதலை உணர்வையும், ஐக்கியத்தையும் அபிலாசைகளையும், எதிர்பார்ப்பையும் ஜனநாயக வாக்களிப்பு மூலம் உலகுக்கு ஒரே குரலில் பறைசாற்றிய ஆத்ம திருப்தியைத் தந்து கழிக்கின்றது சுபானு.

அதேவேளையில் -

இரண்டு தசாப்த காலக் கொடூரப் போரின் பின்னர், அவலம் தீர்த்து அமைதிக்கு வழிசமைத்த சமாதானச் சூழ்நிலையின் எதிர்காலம் குறித்து ஒரு சந்தேகத்தையும் - கேள்வியையும் - கிளப்பி விட்டுத்தான் சுபானு விடைபெறுகின்றாள்.

எடுத்தும், கொடுத்தும், பகிர்ந்தும் இணங்கி வாழும் சமரசத்துக்கு இணங்கியே பராத பேரினவாதிகளின் பிடியில் ஆட்சிக்கோலைக் கையளித்ததன் மூலம் இந்தத் தீவின எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றனர் தென்னிலங்கை மக்கள்.

ஒருபுறம் தம் உரிமைகளுக்காக ஆயிரமாயிரம் வேங்கைகளை ஆகுதியாக்கித் தியாகம் புரியும் வீறுடன் தமிழ்த் தேசியம் கிளர்ச்சி பெற்று, எழுச்சி கொண்டு வெளிப்பட்டு நிற்கின்றது.

மறுபுறம், சிறுபான்மையினரை அடிமைகொள்ளும் பேரினவாதம் தெற்கில் விஸ்வரூபம் கொண்டு ஆட்சி வலுப்பெற்று, அதிகார சந்நதம் கொண்டு மார்தட்டுகின்றது.

இவ்வாறு இலங்கைத் தீவு இரு கன்னைகளாகப் பிரிந்து, அவை ஆக்ரோசத்தோடு எதிரும் புதிருமாக நிலைகொள்ளும் பின்னணியில்தான் தாரண வருடம் இத்தரைமீது கால்பதிக்கின்றது.

அடுத்தது என்னவென்பதே இப்போதைய கேள்வி.

புதிய ஆட்சியின் ஆரம்பம் நாட்டுக்கு அமைதியையும் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் ஐக்கியத்தையும் பெற்றுத் தருவதில் நாட்டம்கொண்டதாக வெளிப்படவில்லை.

மாறாக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான அரசமைப்பு மாற்றங்களைக் கொண்டு வருவதிலும், அதன் மூலம் நாட்டின் ஆட்சி அதிகாரம் ஒரே மையத்தில் - இடத்தில் - தொடர்ந்தும் குவித்து வைக்கப்பட்டிருப்பதை உறுதிப் படுத்துவதிலும் மட்டுமே அதிக சிரத்தை காட்டுவதாகத் தெரிகின்றது.

சமாதான முயற்சிகளை - அமைதி நடவடிக்கைகளை - குழப்பி, நாட்டின் எதிர் காலத்தை கேள்விக்குள்ளாக்கி, நான்கு வருடங்களுக்குள் மூன்றாவது தேர்தல் ஒன்றை இந்நாட்டின் மீது திணித்து, இவ்வளவு குளறுபடிகள் எல்லாம் செய்தது இந்த அதிகாரத்தைத் தொடர்ந்து வைத்திருக்கும் எத்தனத்தின் அங்கங்களே என்பது இப்போது ஓரளவு புலனாகிவருகின்றது.

இந்த முயற்சியின் அடுத்துவரும் அங்கங்கள் இந்தப் புத்தாண்டில் அவசர அவசரமாக அரங்கேறும் என எதிர்பார்க்கலாம். இன்றைய நிலையில், இதைவிட வேறு ஏதேனும் நல்ல விடங்கள் தாரண வருடத்தில் வெளிப்படும் என்பதற்குக் குறிகாட்டும் ஏதுக்கள் ஏதும் இப்போது இல்லை. அதுதான் யதார்த்தம்.

# பாதசாரிகளுக்கு இடையூறாகக் பட்டாசு கொளுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை

## பொலீஸார் கடும் எச்சரிக்கை

யாழ்ப்பாணம்,ஏப்.13

புத்தாண்டு தினமான இன்று வீதிகளில் செல்லும் பாதசாரிகளுக்கு இடையூறாகப் பட்டாசு கொளுத்துவோர் உடன் தண்டிக்கப்படுவதுடன் சட்ட நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவர் என்று பொலீஸார் அறிவித்துள்ளனர்.

பட்டாசுகளைக் கொளுத்தி எறிந்து சேஷ்டைவிடும் இத்தகைய இளைஞர்களால் கடந்தகாலங்களில் குழந்தைகள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலீஸார் சுட்டிக்காட்டினர்.

கடந்த தைப்பொங்கல் தினத்தில் இவ்வாறு பட்டாசுகள் கொளுத்தி வீசப்பட்டமையால் 20இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாதிக்கப்பட்டனர். பட்டாசுகள், ஈர்க்குவாணம் என்பவற்றைக் கொளுத்துவோர் சனநடமாட்டமற்ற ஒதுக்குப்புறமான இடங்களில் கொளுத்துமாறும் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த அறிவுறுத்தலைப் புறக்கணிக்கும் இளைஞர்கள் தண்டிக்கப்படுவர் எனப் பொலீஸார் எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

இதற்காகப் பொலீஸார் இன்று தீவிர ரோந்துப் பணிகளில் ஈடுபடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-6)

## சுதேசிய திருநாள் கொண்டாட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.13

அரியாலை 85ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் நடைபெறவுள்ளன.

பிற்பகல் 2 மணிக்கு அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெறும் விளையாட்டு நிகழ்வுகளுக்கு யாழ். மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர் வி.கே.சண்முகலிங்கம் தலைமை தாங்குவார். பிரதமவிருந்தினராக மின் அத்தியட்சகர் என். குக தாஸனும், சிறப்புவிருந்தினராக அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் ஐ.சங்கருழ் கலந்துகொள்வர்.

இரவு 7.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய விஸ்வநாதன் அரங்கில் இடம்பெறும் கலைநிகழ்வில் பல்வேறு துறைகளில் சேவையாற்றிய பலர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்புவிருந்தினராக அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத் தலைவர் கோ.சிவசுந்தரமும் கலந்துகொள்வர்.

ஆசியுரையை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆற்றுவார்.

கௌரவிக்கப்படுவோர் விவரம் வருமாறு:-

கலைத்துறை - த.பஞ்சலிங்கம் (உதவிக்கல்விப் பணிப்பாளர்), கல்வித்துறை - செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம் (ஆசிரிய ஆலோசகர்), பொதுச்சேவை - சி.சதாசிவம் (உணவுத் திணைக்கள முன்னாள் உத்தியோகத்தர்), விளையாட்டுத்துறை - எஸ்.சி.தியாகராசா (மின்சாரசபை உத்தியோகத்தர்). (ம-5)

## அச்சுறுத்தப்படும் கைதிகளுக்கு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை

கொழும்பு,ஏப்.13

அச்சுறுத்தல்களை எதிர்நோக்கும் அரசியல் கைதிகளுக்கு பூரண பாதுகாப்பை வழங்க சிறைச்சாலைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசியல் பேதமின்றி இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் ரூபிமர்சூர்க் தெரிவித்துள்ளார்.

சில அரசியல் கைதிகளுக்கு, தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளாலும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களாலும் பல்வேறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. சில நேரங்களில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தோர் கடுமையாக தாகக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால், அவர்களுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளது.

விளக்கமறியலில் உள்ளவர்களுக்கு யாரும் எவ்வகையான இடையூறுகளும் செய்யமுடியாது எனவும் இது அடிப்படை உரிமைமீறல் செயலாகும் என்றும் ஆணையாளர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக ஏற்கனவே, விசாரணைகளில் குற்றவாளியாகக் காணப்படும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக் கெதிராகக் கடும்நடவடிக்கை எடுக்கப்படும் எனச் சிறைச்சாலைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (ம-ரி)

## முன்னாள் நா.ம. உறுப்பினர்கள் 50 பேருக்கு மேல் தோல்வி

### இருவர் 'கபினெட்' அமைச்சர்கள்

கொழும்பு,ஏப்.13

ஏப்ரல் 2ஆம் திகதி இடம்பெற்ற பொதுத்தேர்தலில் குறைந்தது 50 முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியுற்றுள்ளனர். இவர்களில் அமைச்சரவை அந்தஸ்துப் பெற்ற இரு அமைச்சர்களும் அமைச்சரவை அந்தஸ்துப்பெறாத பல அமைசசர்களும் அடங்குவர்.

ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த 26பேரும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 14பேரும் ஜே.வி.பியிலிருந்து 8 பேரும் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து இருவரும் 2001 டிசெம்பரிலிருந்து 2004 பெப்ரவரி வரையிலும் நாடாளுமன்ற உறுப்பினாகளாக இருந்தவர்கள்.

கல்வி, கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவககுவும் தென்பகுதி மேம்பாட்டு அமைச்சர் ஆனந்தகுலரத்ன ஆகிய இருவருமே அமைச்சரவை அந்தஸ்துப் பெற்றிருந்த அமைசசர்களாவர். நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரான அம்பாந்தோட்டையைச் சேர்ந்த சிறி அந்திரஹெனடியும் தோல்வியுற்றவர்களில் ஒருவராவார். (ப)

**நாளை**

சித்திரை 02
புதன்கிழமை
(14.04.2004)
திதி: தசமி
இரவு 08.34 வரை.
நட்சத்திரம்: திருவோணம
காலை 6.55 வரை
[illegible] 4.3[illegible]-6.05
[illegible] 12.05-1.35
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

இன்றுதான் புதிதாய்ப் பிறந்தோம் என்றெண்ணிக் கருமமாற்றுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பில் 2,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஏற்பாடு

மட்டக்களப்பு,ஏப்.13

மட்டக்களப்பில் இடம்பெற்ற மோதல் காரணமாகத் தற்போது இடம்பெயர்ந்துள்ள சுமார் 2ஆயிரத்து 405 குடும்பங்களிற்கு நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் நேற்று எடுக்கப்பட்டதாக வாகரை பிரதேச செயலாளர் எம்.உதயகுமார் தெரிவித்துள்ளார்.

கதிரவெளி, பாலச்சேனை, உச்சாகேணி, அமனாவெளி, வாகரை வடக்கு, வாகரை மத்தி ஆகிய பிரதேசங்களிலுள்ள மக்களுக்கே இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

இந்தப் பிரதேசங்களிலுள்ள மக்கள் மோதல் இடம்பெற்ற வேளை காடுகளிலும் நண்பர், உறவினர்களின் வீடுகளிலும் தஞ்சமடைந்திருந்ததால் இவர்களுக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை. முகாம்களில் தங்கி இருந்தவர்களுக்கு ஏற்கனவே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு இரு வாரங்களுக்கான உலர்உணவு வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## முன்னாள் பிரதமர் ரட்ணசிறி சபாநாயகர் பதவிக்குப் போட்டி

கொழும்பு,ஏப்.13

புதிய நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விககிரமநாயக்க நிறுத்தப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பாக, கூட்டமைப்பின் தலைவர்கள் ஜனாதிபதியின் அனுமதியைப் பெற்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 22ஆம் திகதி கூடவுள்ள புதிய நாடாளுமன்றக் கூட்டத்தில் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் புதிய சபாநாயகர் தெரிவுசெய்யப்படவுள்ளார்.

தற்போது ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியலில் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவின் பெயர் இடம்பெறாதபோதிலும் தேசியப்பட்டியலின்படி நியமனம்பெறும் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றம் கூடுவதற்கு முன்பு ராஜினாமாச் செய்து அவருக்கு உறுப்பினர் பதவியை வழங்கவுளளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, சபாநாயகர் பதவிக்கு ஐ.தே.கவின் சார்பில் முன்னாள் நீதியமைச்சர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார போட்டியிடவுள்ளார். (ம-8)

## இன்று இரதோற்சவம்; புத்தாண்டு விசேட பூசைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.13

'தாரண' புதுவருடப் பிறப்பான இன்று குடாநாட்டின் சில ஆலயங்களில் வருடாந்த மஹோற்சவத்தையொட்டிய இரதோற்சவம் இடம்பெறவுள்ளது.

★யாழ். அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் காலை 9.30 மணிக்கு இரதோற்சவம் இடம்பெறும். காலை 8.15மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெற்று 9 மணிக்கு இறைவன் கோபுரவாசலுக்கு எழுந்தருளுவார்.

★மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் நண்பகல் 12மணிக்கு இரதோற்சவம் இடம்பெறும். காலை 10.00மணிக்கு வசந்தமண்டபப்பூசை நடைபெற்று விநாயகப்பெருமான் தேருககு எழுந்தருளுவார்.

இதேவேளை, குடாநாட்டில் உள்ள இந்து ஆலயங்களில் புதுவருடப் பிறப்பையொட்டிய அபிஷேகங்கள் மற்றும் விசேட பூசைகள் என்பன பிற்பகல் 3மணி முதல் நடைபெறவுள்ளன.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் காலை 6 மணிக்கு ஸ்நபன அபிஷேகத்துடன் ஆரம்பமாகும் பூசைகள் மாலை 4.30மணிக்கு நடைபெறும் வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வருதலுடன் நிறைவுபெறும்.(ம-10)

## உயர் பதவிகளில் மாற்றம்; ஐ.தே.க. மறுசீரமைக்கப்படும்

கொழும்பு,ஏப்.13

ஐ.தே.கட்சியின் உயர்பதவிகளில் உள்ள பெரும்பாலானோர் அகற்றப்படவுள்ளதோடு, கட்சியினுள் புதிய பதவிகள் உருவாக்கப்படவுள்ளன. கட்சி முற்றிலும் மறுசீரமைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய, ஐக்கியதேசியக் கட்சியின் தலைமைப் பதவியை வகித்துவரும் மலிக்சமரவிக்ரம மற்றும் செயலாளர் செனரத் கப்புகொட்டுவ ஆகியோர் பதவியிலிருந்து விலகுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். அப்பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட இருப்போர் பற்றி இதுவரை தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. ஆயினும், அப்பதவிகளுள் ஒன்றுக்கு அனேகமாக மிலிந்தமொறகொட நியமிக்கப்படலாமெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை இல்லாத பல புதிய பதவிகள் கட்சியில் அறிமுகப்படுத்தப்படவுள்ளதோடு, அவற்றுள் தேசிய அமைப்பாளர், தொழிற்சங்கங்களின் அமைப்பாளர் மற்றும் இளைஞர் செயற்பாட்டு அமைப்பாளர் பதவிகளும் உருவாக்கப்படவுள்ளன. தேசிய அமைப்பாளராக எஸ்.பி.திஸாநாயக்காவும் தொழிற்சங்க அமைப்பாளராக ராஜித சேனாரத்னவும் மற்றும் இளைஞர் செயற்பாடுகள் தொடர்பான அமைப்பாளராக ரவிகருணா நாயக்கவும் நியமிக்கப்படவுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

உ

கணபதி துணை

# மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தான
# தேர்த் திருவிழா சிறப்பு மலர்
# 13-04-2004

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி



விக்கினம் தீர்த்தருளும் மானிப்பாய் மருதடி ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு இன்று தேர்த்திருவிழாவாகும். அஞ்சலென அபயமளித்து அழகியரதத்தில் ஆரோகணித்து அடியார்களுக்கு அருட் காட்சியளிப்பதற்காக திருவீதி வலம் வருகின்ற பஞ்சமுக விநாயகர் திருக்கோலம் பார்க்கப் பார்க்கத் தெவிடாத பரவசமூட்டுகின்ற திருக்காட்சியாகும்.

இன்றைய புத்தாண்டு தினம் முதலாக ஐங்கரப் பெருமானின் அடியார்கள் அனைவரும் மகிழ்ச்சி நிறைந்த நல்ல புதுவாழ்வு வாழ்ந்து நிம்மதியோடு இருக்க வேண்டுமென்று உளமாறப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

துன்ப துயரங்கள் விலகி, இன்னல்களும் இடுக்கண்களும் அகன்று இனிமேலாவது சந்தோசவாழ்வு வாழ எம்பெருமான் துணை நிற்கவேண்டும்.

தேர்த்திருவிழாவானது மஹோற்சவத்தில் அழித்தலைக்குறிப்பதாகும். எனவே அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தொழித்து மீண்டும் துளிர்க்காவண்ணம் வேரோடு பிடுங்கி எறிந்து வினைதீர்க்கப் புறப்பட்டுவிட்டார் ஆனைமுகப் பெருமான்.

ஆகவே கணபதியானைக் கைதொழுது துன்பம் இல்லாத வாழ்வருளவேண்டுமென்று வேளமுகத்தானை வேண்டிப் பணிந்து இன்றைய தேர்த்திருவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.

இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.



## ஆனைமுகத்தானே அருள்வாய்!

விக்கினந் தீர்க்கின்ற விநாயகப் பெருமானே  
தேரேறி வந்தே துயர் போக்கவேண்டும்  
பக்குவமாய் நாங்கள் பாரினில் வாழ்ந்திட  
பானை வயிற்றோனே திருவருள் புரிவாய்  
சிக்கல்கள் நீங்கிப் புதுவாழ்வு நாம் வாழ  
புத்தாண்டு நாளில் ரதமேறி வருவாய்!  
இக்கணம் முதலாய் நாம் இன்பமே பெற்றிட  
ஆனைமுகத்தானே அருள்புரிய வேண்டும்.

- கணபதி கழல் பணிவோன்.

# மருதடியானின் மலரடி தொழுது திருவடி பெற்றிடப் பிரார்த்திப்போமே!

**இன்று சித்திரத்தேரிலே சிங்காரப் பவனி**

தனக்குமேல் வேறுதலைவன் இல்லாத தன்மையினால் விநாயகன் என்னும் கணங்களுக்கெல்லாம் பதியாக விளங்குகின்ற தன்மையினால் கணபதி என்றும் விக்கினங்களை நீககுகின்றவன் ஆதலால் விக்கினேஸ்வரன் என்றும் சொல்லப்படுகின்ற ஆனைமுகப் பெருமான தம்மை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும் துயரங்களையும் நீக்கி அருள்புரியும பொருட்டு எழுந்தருளி இருக்கும் தலம்தான் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்.

இன்று மருதடியான் சித்திரத்தேரேறி சிங்காரக்காட்சி தரும் பொன்னாளாகும். சரித்திரப் பிரசித்தி பெற்ற இந்த மருதடி விநாயகர் திருக்கோயில் மானிப்பாய் பதியிலே மங்களகரமாக அமைந்து பொலிந்து தோன்றுகின்றது. அழகிய ராஜ கோபுரம் கிழக்குவாயிலிலே கம்பீரமாக அடியவர்களை வாவா என்று அழைப்பது போல் அருமையான காட்சிதருகிறது.

ஒவ்வொரு வருடமும் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று ரதோற்சவம் நிகழும் இந்த ஆலயத்தில் அடியார்கள் திருக்கூட்டம் அலை அலையாக வந்து அருள் பெறுவதற்காக பக்திப் பரவசத்துடன் ஒன்று கூடுங் காட்சி அருட்காட்சியாகும். வேறு எங்கும் காண முடியாத பக்தர்கள் திருக்கூட்டம்.

'வினை தீர்க்கும் விநாயகனே! இடர் களைந்து துயர் போக்கி எமக்கு அருள்புரிய வேண்டும்' என்று அடியார்கள் சித்திரத்தேரினிலே ஆரோகணித்து வருகின்ற ஆனைமுகப்பெருமானின் அடிபணிந்து வழிபடுகின்ற காட்சி காண்பதற்கு அரிய காட்சியே.

"விநாயகப் பெருமானுக்கு அரோஹரா! கணபதிக்கு அரோஹரா" என்ற கோஷம் வானைப்பிளக்க, அன்பர்கள் பஜனைக் கோஷ்டி முழக்கம் நாலாபக்கமும் அதிர, மங்கள இசையானது காதுகளில் தேனாகப் பாய பஞ்சமுக விநாயகர் அஞ்சேலென அபயமளித்து ரதத்தில் எழுந்தருளி அடியார்களுக்குக் காட்சி கொடுக்கும் விதமே அலாதி.

மருதடியானின் மலரடி பணிந்து போற்றி வணங்கினால் அவன் திருவடிப்பேறு கிட்டும் என்ற நம்பிக்கையுடன் அன்பர்கள் இந்த ஆலயத்தில் இன்று தேர் வடம் பிடித்து இழுப்பார்கள். மங்கையர் கூட்டம் ஒரு புறமாகவும் ஆடவர் கூட்டம் ஒரு புறமாகவும் விநாயகப் பெருமான் ஏறிவருகின்ற சித்திரத் தேரின் வடத்தினைப்பிடித்து சொர்க்கத்தில் ஓர் இடம் பிடிக்கலாம் என்ற எண்ணம் முகங்களில் பிரதிபலிக்க வருங் காட்சி பக்தி மயமானது.

மருதடியான் கொடியேறிவிட்டால் மானிப்பாயே புனித நகரமாக மாறிவிடும். எங்கு பார்த்தாலும் வாழை, கமுகு மகரதோரணங்களும் மாவிலை, பூச்சரங்களுமாக மானிப்பாயே விழாக்கோலம் பூண்டு காட்சியளிக்கும்.

போற்றித்துதித்து ஐங்கரனை ஏற்றி நிற்கின்ற அடியார்கள் களைத்து நிற்கும் வேளை ஆங்காங்கே தண்ணீர்ப்பந்தல்கள் தாகசாந்தி அளிப்பது பெரும் புண்ணிய கைங்கரியமாகும்.

இன்றைய புத்தாண்டு தினத்திலே ஐங்கரனை வணங்கி வழிபட்டு அமைதியான, சுபீட்சமான, மங்களகரமான, சமாதானம் நிறைந்த ஒற்றுமை வாழ்வைத் தரவேண்டுமென வேண்டி அதற்கும் அவனருளையே நாடி நிற்போமாக.

"வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

- திருவரன்

அனைவருக்கும் எமது இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஆனைமுகனே! தேரேறி வந்து வினைதீர்க்க வேண்டுமையா!

மூர்த்தி ஓடியோ வீடியோ சென்ரர் & கலர் லப்

எக்ஸ்போ எயார் விமான ரிக்கட் பதிவுகளுக்கும் துல்லியமான படப் பிரதியாக்கத்திற்கும் தரமான ஒலி, ஒளிப்பதிவுகளுக்கும்

மூர்த்தி ஓடியோ வீடியோ சென்ரர்,
பிரதான வீதி,
மானிப்பாய்.

(C/34450)

கணபதியே வருவாய்! திருவருளே தருவாய்!!

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

லிங்கன் கிறீம் கவுஸ்

119, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/34457) (26)



சிவமயம

வினைதீர்க்கும் விநாயகனே! தேரேறி வந்து காப்பாய் ஐயனே!

யாழ்.மக்களுக்கு எனது இனிய தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

இந்தியப் பரம்பரை ஜோதிடர் P.T.R. அவர்கள்

யாழ். புண்ணியபூமிக்கு மூன்றாவது முறையாக வருகைதந்துள்ளார்கள்.

திரு. P.T.R. அவர்கள்

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்க்கப்படும்.

திருமணத் தடங்கலா, காதலில் தோல்வியா, தீராத வியாதியா, உயர்கல்வியில் தடங்கலா, கடன் தொல்லையா?, தொழில்முன்னேற்றம் இல்லையா?, புதிய தொழில் தொடங்கவேண்டுமா?, குழந்தைப்பாக்கியம் இல்லையா?, வெளிநாடு செல்லத் தடையா?

எதுவாயிருந்தாலும் ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

(சி-34446)

இடம்: பாலாஜி இன் விடுதி

292, கஸ்தூரியார் வீதி (கன்னாதிட்டி சந்தி அருகில்), யாழ்ப்பாணம்.



தேரேறி வந்து துயர் போக்கும் அப்பனே!

அனைவருக்கும்
எமது இனிய புத்தாண்டு வாழ்த்துகள்

யாழ்நகர மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

NANDA TEX FANCY HOUSE

வண்ண வண்ண ஆடை வகைகளை எண்ணம்போல் தெரிவு செய்துகொள்ளவும் நவநாகரிக பாணியிலமைந்த நவீன டிசைன்களிலான புத்தம்புதிய சாறிவகைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான இடம்:

நந்தா ரெக்ஸ்ரைல்ஸ் & பான்ஸி ஹவுஸ்

மானிப்பாய் ☏ 4590685



15% கழிவு

(சி-34386)(30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸாரின் விழா

சித்திரைப் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு யாழ்பொலீஸார் விளையாட்டு நிகழ்வொன்றை இன்று காலை 9 மணி முதல் யாழ்.மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடத்தவுள்ளனர். அனைவருக்குமான விளையாட்டுகள நடைபெறவுள்ளன. பங்குபற்றுபவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்படும்.(ம-6)


**கருத்தரங்கு**

அளவையியல் **2004 A/L**

**BEACON** வதிரி நெல்லியடி

ஆசிரியர்: **A.விக்கி**

(கொ/இந்துக் கல்லூரி)

காலம்: 14, 15 தினங்களில்

காலை 8.00-4.00 மணிவரை.

(30768) (26)



**நந்தன் அக்கடமி**

கொடிகாமம் - சாவகச்சேரி

புதிய பிரிவு ஆரம்பம்
14.04.2004 புதன்
பிற்பகல் 1.00மணிக்கு

தமிழ் - M.S. அமரசிவம்
இந்து நாகரிகம் / இந்துசமயம் - S.விஷியந்தன்
பொருளியல் - M.விக்கி
வரலாறு - வி.விஜயரூபன்
புவியியல் - S.சிவகுமார்
அளவையியல்- K.அமில்ரன்
நாடகமும் அரங்கியலும் - V.விக்கி
வணிகப் புள்ளிவிபரவியல் - பிரபல ஆசிரியர்

**O/L DAY CLASS**

எமது முன்னணி ஆசிரியர்களால் நடைபெறுகின்றது.

- நிர்வாகி.

(30781)(38-18-19)



**இதோ!**

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி**

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(21-18-19) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-34221)


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க அங்கத்தவரும்,
சமூக நலன் விரும்பியுமான

**நாகரத்தினம் சரவணபவான்**

(கல்வயல், சாவகச்சேரி)



அவர்கள் 08.04.2004இல் அகாலமரணமடைந்ததையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினர், உறவினர்களுடன் நாமும் எமது ஆழ்ந்த கவலையைப் பகிர்ந்து கொள்கிறோம்.

கல்வயல் சமூக சேவாசங்கம்,
கலைமகள் படிப்பகம்.

(30782)(21-18-19)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

உதயம் 1950 - 02 - 27



மறைவு 2003 - 04 - 27

திருமதி **குமாரசாமி பரமேஸ்வரி** (கரம்பகம், மிருசுவில்)

திதி:15-04-2004

அன்பெனும் அமுதூட்டி பாசத்தால் பாதுகாத்து
பண்பினால் அரவணைத்து வாழ்க்கைப் பாதைக்கு
பல வழிகளை ஒழுங்கமைத்து பாதி வழி
அழைத்து வந்து - மீதி வழி
எமை தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள் அம்மா!
எம் கணப்பொழுது தினப்பொழுதாகி
ஆண்டொன்று அவசரமாய் கடந்து விட்டது
அம்மா உங்கள் பிரிவின் துயரம் - எம்
அனைவர் மனதை விட்டும் சிறிதளவும் குறையாதம்மா!
எம் உயிர் எம் உடலுடன் உறவாடும் வரை....
உங்கள் ஆத்மா சாந்தியடையப் ஆண்டவரை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அம்மா உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
அன்புக் கணவர் - குமாரசாமி,
பிள்ளைகள், மருமக்கள், பேர்த்திமார், பேரன்,
சகோதரர்கள் - முத்துக்குமாரு, இராசரத்தினம், ஈஸ்வரியம்மா, விசஜரத்தினம்.

17,திருவள்ளுவர் வீதி,
உக்குளாங்குளம்,
வவுனியா.

(30650) (26-21-19-13)


# தென் இந்திய நடனக் கலைஞர்களின்

## நடன சங்கமமும், நடனப் பயிற்சியும்

**(2004 மே 4 முதல் 10 வரை)**

பரதநாட்டியம், குச்சுப்புடி, கதகளி ஆகிய சென்னையைத் தளமாகக் கொண்ட உலகப் புகழ்பெற்ற தென் இந்திய சாஸ்திரிய நடனங்களை ஏழு நாள்களுக்கு யாழ். மண்ணில் நடத்தவுள்ளோம். (04-05-2004 - 10-05-2004) வரை.

மேற்படி நிகழ்ச்சியானது, நடனப் பாரம்பரியத்தில் உருவாகிய ஆசிரியர்கள், ஆசான்களினால் நடத்தப்படும் நடனத்தை முறையாகப் பயின்றவர்களாகவும் அந்தந்த நடன வடிவங்கள் சார்ந்த *கலாசேத்ரா, வழுவூர், பந்தணை நல்லூர், கலாமண்டலம், வேம்பட்டி குச்சுப்புடி பயிற்சி நிலையம்* முதலிய பள்ளிகளூடாகக் கற்றுத்தேர்ந்த விற்பன்னர்களாகவும், சிறந்த ஆற்றுகையாளர்களாகவும் உள்ள உலகப் புகழ்பெற்ற

**அலமேலுவும்,**
**உஷா வசந்தகுமார்,**
**உன்னிகிருஸ்ணன்** - பரத நாட்டியமும்
**ராஜேஸ், லக்ஸ்மி பிரியா** - குச்சுப்புடி
**ஸ்ரீபாலசுப்பிரமணியம்** - கதகளி

ஆகியோருடன் அவர்களது நடனக் குழுவினரும் இணைந்து இந்த நடன நிகழ்ச்சியையும் நடனப் பயிற்சியையும் வழங்கவுள்ளார்கள்.

இந்த ஏழுநாள் நடனப் பயிற்சியில் (பரதநாட்டியம், குச்சுப்புடி, கதகளி)
சேரவிரும்பும் மாணவர்கள் எதிர்வரும் 20.04.2004 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பதிவுசெய்யவும்.

பதிவுசெய்யவேண்டிய முகவரி: **ரி.கே.ரூறிஸ்ற் இன்**

*பலாலி றோட், கந்தர்மடம் சந்தி (அரசடி வீதி), யாழ்ப்பாணம்.*

தொலைபேசி இலக்கம் - 077 6143541, 021 222 5680

(C34430)(34)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர் — 2004


அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!
சிறப்பான, துல்லியமான, தெளிவான அழகிய
புகைப்படங்களுக்கு அருமையான இடம்
ஊர்மிளா
ஸ்ரூடியோ & வீடியோ
தொலைத் தொடர்பு நிலையம்
3ஆம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு
021 222 6587
(C/34436)
அழகிய புகைப்படங்களுக்கு நாடுங்கள் ஊர்மிளா ஸ்ருடியோ





அனைவருக்கும் எம் இனிய
சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
தங்க நகையுலகில்
தனக்கெனத்
தனியிடம் பிடித்து நிற்பவள்
நிருத்திகா
ஜுவல்லர்ஸ்
177, Kasthuriar Road, Jaffna.
Tel:021-222 2694.
(C/34402)










அன்பர்கள்,
நண்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது சித்திரைப்புத்தாண்டு
நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!
துஷா பல்மூக்குக் கண்ணாடியகம்
*கண்களைப் பரிசோதித்துக் கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ள
*உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள
*மிதப்புப் பற்களுக்குக் கிளிப் பொருத்திக்கொள்ள
Thusha Opticians
544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 2223461
0777 150032
544, Hospital Rd, Jaffna.
(C/34436)



மங்களகரமான இனிய சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்!
அண்ணா தயாரிப்புக்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
தரத்திற்கு உத்தரவான

| | | | |
|---|---|---|---|
| அண்ணா | கோப்பி | அண்ணா | அரிசி மா |
| அண்ணா | பற்பொடி | அண்ணா | அப்பம் மா |
| அண்ணா | ஜீவாகாரம் | அண்ணா | தோசை மா |
| அண்ணா | கறிமிளகாய்த் தூள் | | |

▲ குமரன் விபூதி ▲ துர்க்கா பத்தி
▲ சாயி சுகந்தா ▲ ரோஸ் பத்தி



அண்ணா தொழிலகம்
இணுவில். (C/34371) T.P.:3565



தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுத் தொடர வழிசமைக்க வந்திட்ட
சித்திரைப் புத்தாண்டில் அனைவருக்கும்
எம்மினிய புதுவருட நல்வாழ்த்துக்கள்!
அழகிய கலைநயம்.... எழிலுறு தொழில் வளம்.... உயர்தரமிகு தங்கநகைகளுக்கு....
தயா நகைப்பூங்கா
213C, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. No.: 021 -222 5846, 0777 840379.
☆தங்க நகையுலகில் தமக்கெனத் தனியிடம் வகித்து மங்காப் புகழுடன் திகழ்பவர்கள்
☆ நவீன டிசைன்களின் நாகரிக முன்னோடிகள். நம்பிக்கையுடன் இன்றே நாடுங்கள்.
(C/34356) (26)





பேச்சு நிறைவாகி வாழ்வில் மகிழ்ச்சி பொங்க அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!
நியூ சோபிதா நகை மாடம்
உங்கள் தங்க நகைத் தேர்வில் தரத்திற்கு முதலிடமா? நாடுங்கள்:
NEW SHOBITHA JEWELLERS
(184), 74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(184), 74/1, Kasthuriar Road, Jaffna. T.P.No.: 222 5265. (C/34353) (26)





KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS
அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது ஸ்தாபனத்தின் உளங்கனிந்த சித்திரைப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்!
KINGS
ELECTRONICS
No.:64, Stanley Road, Jaffna.
Computers, Tamil Audio CD,
Video CD, Software CD, MP3 CD,
T.V., VHS டெக், VCD டெக், MP3
டெக், Table Fan மற்றும்
தரமான எலக்ரோனிக் பொருள்களுக்கும்
நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:
கிங்ஸ்
எலெக்ரோனிக்ஸ்
இல.:64, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
Tel : 021-222 3857
இல.64, ஸ்ரான்லி வீதி,
No. : 64, Stanley Road, Jaffna.
யாழ்ப்பாணம்.
(C/34398)
KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS KINGS


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர் – 2004

# இன்பம் பொங்க, ஆனந்தம் மேலிட அனைவருக்கும் புதுவாழ்வு மலர்க

## புதுவருடச் செய்தியில் நல்லை ஆதீனமுதல்வர்

இன்று பிறக்கவிருக்கும் சித்திரைப புத்தாண்டு தமிழர் தம் வாழ்வில் ஒரு நல்ல விடிவைத் தரப்போகின்றது என்கின்ற எதிர்பார்ப்புடன் வரவேற்கப்படுகிறது. 'தாரண" வருஷமாகிய இந்தப் புதுவருஷம் மங்களவாரமாகிய செவ்வாய்க்கிழமை பிறந்திருப்பது ஒரு விசேட அம்சமாகும். இது ஒரு பொன்னான நன்னாள்.

செவ்வாய்க்கிழமை அம்பிகைக்கும் முருகனுக்கும் உரிய நாளாகும். அரக்கத்தனம் மேலோங்கி, அசுரத்தனம் தலைதூக்கும் வேளையில் அகிலத்தில் அவதரித்த ஆறுமுகப் பெருமான் அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காத்தருள்புரிந்தார்; ஆதிபராசக்தியாக விளங்குகின்ற அம்பிகையும் லோகமாதாவாகத் தோன்றி இரக்கமற்ற அரக்கர்களை அழித்தொழித்தருளினார் என்பது புராண, இதிகாச வரலாறுகள் மூலமாக அறியக் கிடக்கிறது.

ஆகவே, இன்று பிறந்துள்ள புத்தாண்டு முதல், நாட்டில் அமைதியும் சமாதானமும் சமத்துவமான சுபீட்ச சுகவாழ்வும் மலரப்போகின்றது. 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதல்லால் வேறொன்றுமறியேன் பராபரமே' என்றபடி இனிமேல் நாட்டில இன்பம் பொங்க, மகிழ்ச்சி பொங்க, சந்தோஷம் மலர, ஆனந்தம் மேலிட, சகல மக்களும் சிரித்த முகத்துடன் மங்களகரமாக வாழ எல்லாம்வல்ல நல்லைக் கந்தனின் பாதாரவிந்தங்களைப் பணிந்து நல்லைக் குருமணியின் திருவடிகளைப் போற்றி, உளமாரப் பிரார்த்தித்து நல்லாசிகளை வழங்குகின்றோம்.

ஈழம்வாழ் அனைத்து மக்களும் துன்பங்களும் தொல்லைகளும் நீங்கி ஆனந்த மேலீட்டினால் இன்றைய புத்தாண்டு தினத்தில் புத்தாடையணிந்து இனிப்புப் பண்டங்களையுண்டு மங்களகரமாக சுற்றஞ்சூழ மகிழ்ந்திருக்கவேண்டும் என்று வாழ்த்துக்கள் கூறி அமைகின்றோம்.



"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாசார்ய சுவாமிகள்*
*இரண்டாவது குருமஹா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்*

# கௌரவமான வாழ்க்கைக்கு வேண்டுதல் செய்வோம்!

இன்று புத்தம்புதிய மலராக மலர்ந்து பிரகாசிக்கப்போகும் தமிழ்ப் புது வருடமாகிய தாரண வருஷம் சித்திரை மாதம் முதலாம் திகதி மங்களம் பொங்கிய செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி 5 நிமிடத்துக்கு வசந்த காலக் குதூகலத்துடன் உலகம் சிறக்கப் பிறக்கின்றது. இந்நன்நாளில் 'உதயன்' பத்திரிகை மூலம் ஆசிச் செய்தி தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்புதுவருடப் பிறப்பானது அனைத்து ஜீவராசிகளுக்கும் நன்மை பயப்பதோடு, மனித குலத்துக்குப் புத்துணர்ச்சியையும் தார்மீக எண்ணத்தையும், தயாகுணத்தையும், உயர்நத சிந்தனையையும் பூரணமாகத் தருவதுடன், இனம், மதம், மொழி கடந்து அனைத்து மக்களும் இப்பூமாதேவியின் ஒரு தாய் பிள்ளைகள் என்ற உயர்ந்த எண்ணத்துடன் செயற்பட திடசங்கற்பம் கொள்ளவேண்டும்.

அத்துடன், உயிர்ச்சேதம், இயற்கை, செயற்கை அழிவுகள், வறுமை, நோய், மனக்கஷ்டம் ஆகியன முற்றாகநீங்கி மானிட வாழ்க்கையின் மகிமையை உணர்ந்து இவ்வையத்துள் சிறப்பாக வாழ தூர் தாரகையாகவும், பொறுமையின் தாயாகவும் விளங்கும் இப்பூமாதேவியை வணங்கிப் பிரார்த்தித்து நாடு, நலம், மக்கள் நிறைந்த செல்வம், சாந்தி, சமாதானம் சுபீட்சம், கௌரவமான வாழ்க்கை என்பன கிடைக்க வேண்டுமென ஆசிகள் பல கூறுகின்றேன்.



*சர்வதேச இந்துமதகுரு பீடாதிபதி*
*சிவஸ்ரீ ச. மகேஸ்வரக்குருக்கள்.*

# சாந்தி, சமாதானம் நிலவிட புத்தாண்டில் பிரார்த்திப்போம்!


"தாரண" எனும் பெயருடைய புதிய வருஷம் இன்று பிறக்கின்றது. பிரபவ முதல் அஷய வரையுள்ள அறுபது வருட சுற்று வட்டத்தில் இது பதினெட்டாவது வருடமாகும். இந்து சமய வழிபாட்டு மரபுகள் பலவற்றுள் மக்கள் வாழ்வியல், சமய நம்பிக்கைகள், சோதிட சாஸ்திர நம்பிக்கைகள் என்பன இணைந்த ஒரு சம்பிரதாய பூர்வமானதும் சாஸ்திரோக்தமானதுமான கிரியைகளோடிணைந்த சமய வாழ்வியல் சடங்காக வருடப்பிறப்பு அமைகின்றது.

சோதிட சாஸ்திர மரபின்படி பிரம்மாவிலிருந்து பிறப்பு உண்டான காலத்திலிருந்து எத்தனையாவது மன்வந்தரத்தில் எந்த யுகத்தில் பிரபவ முதலாக விளங்கும் அறுபது வருடங்களும் எவ் ஒழுங்கில் அமைகின்றன என்பதனை புராணங்கள் தெளிவுபடுத்துகின்றன. வானியலோடிணைந்த இம் மரபுகளைப் பஞ்சாங்கங்கள் மிகத் தெளிவாக எமக்கு எடுத்துக்கூறி அறியத் தரும் நூல்களாக விளங்குகின்றன.

ஒவ்வொரு வருடத்திற்குமான பலாபலன்களை பஞ்சாங்கங்கள் எடுத்துக் கூறினாலும் நாம் கைக்கொள்ளும் இறைவழிபாடுகள், தர்மசிந்தனைகள், அறச்செயல்கள் போன்றவையே எம் வாழ்வை வளப்படுத்துகின்றன.

உதயமாகும் இப்புத்தாண்டில் எம் வாழ்வை வளப்படுத்தும் கைங்கரியங்களில் ஈடுபட உறுதி பூணுவோம. உலகில் சாந்தியும், சமாதானமும் ஏற்பட அனைவரும் பிரார்த்திப்போம். சகல ஜீவராசிகளும் ஷேமமுடன் வாழ ஸ்ரீதேவி, பூமிதேவி சமேத ஸ்ரீ வேங்கடேச வரதராஜப்பெருமாளைப் பிரார்த்தித்து எமது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றோம்.

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!



*ஸ்ரீவத்ஸ வ. இராஜேஸ்வரக்குருக்கள்*
*பிரதம குரு*
*ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம் வண்ணை – யாழ்ப்பாணம்.*

# அஞ்ஞான இருள் அகற்றி மெய்ஞ்ஞான ஒளி காண்போம்!



மண்ணில் நல்லவண்ணம் வாழவும், மக்கள் மத்தியில் அன்பு, சமாதானம, புரிந்துணர்வு, சுதந்திரம் இவைகளை எடுத்துக் கூறவுமே சமயங்கள், பக்தி இலக்கியங்கள், புராணங்கள் தோன்றின.

இறைவன் ஒருவனே என வேதங்கள் எடுத்துக்கூறுகின்றன. 'ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி' என்பதே இதற்குச் சான்றாகும்.

அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு மெய்ஞ்ஞான ஒளிகாண பல்வேறு மார்க்கங்களையும் மதங்கள், ஞானிகள் எடுத்துக்காட்டினார்கள்.

ஆனால், அவையாவும் சச்சிதானந்தமாக விளங்கும் தெய்வம் ஒன்றே என்பதை ஒப்புக்கொள்கின்றன.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பது திருமூலர் மந்திரம்.

நமது சைவசமயம் விரதம்,விழா, பண்டிகைகள் மூலம் மானிடத்தின் மத்தியில் வேற்றுமையில் ஒற்றுமையை வளர்க்கின்றதெனலாம்.

எனவே, நமது வாழ்வு வலிவுடனும் பொலிவுடனும் வருகின்ற 'தாரண' ஆண்டிலே ஆன்மீக வாழ்வாகவும், எதிர்காலம் சமாதானம் சுதந்திரம் நிறைந்ததாக விளங்கவும்.

"ஓம் பத்ரம் கர்ணேபி; ச்ருணுயாமதேவா பத்ரம் பச்யேம அக்ஷபிர் யஜத்ரா ஸ்திரை ரங்கை ஸ்துஷ்டுவாகும் ஷஸ்த நூபி வ்யசேம தேவஹிதம் யதாயு"

என்னும் சுலோகத்தின் மூலம் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி - சாந்தி - சாந்தி

*சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள்*
*பிரதமகுரு. ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரன் கோயில். யாழ். பல்கலைக்கழகம்.*

# சிவத்தமிழ்ச்செல்வியின் வாழ்த்து

தாரண வருடம் பிறக்கிறது. எங்கள் கருமங்கள் யாவும் ஒழுங்காக நிறைவேறப் பிரார்த்திப்போம்.



*துன்பம் தொலையட்டும்*
*இன்பம் பெருகட்டும்*
*கவலைகள் அகலட்டும்*
*கடவுள் நம்பிக்கை ஓங்கட்டும்*
இவ்வாறு பிரார்த்திப்போம்
*ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே சூழ்க*
*வையகமும் துயர் தீர்கவே.*

ஞானக் குழந்தையின் திருமுறை இது.

எனவே, எம் மத்தியில் குரோதம் அகன்று, சமாதானம் நிலைக்கப் பிரார்த்திப்பதோடு, அன்பு, அஹிம்சை, பொறுமை, பரோபகாரம் என்பன எம் மத்தியில் நிலவட்டும் என்று மேலும் பிரார்த்தித்து அமைகின்றேன்.

*கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி* (J.P.)
*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*

# சமாதான வேண்டுகோளுக்கு உலகம் செவிசாய்க்கட்டும்!

## யாழ். ஆயரின் புத்தாண்டுச் செய்தி



இலங்கை நாடாளுமன்றத்திற்கான 13 ஆவது பொதுத்தேர்தல் 38 ஆண்டுகளின் பின்னர் வன்செயல்கள் அற்ற அமைதியான முறையில் நடந்தேறியிருப்பது மகிழ்வைத்தருகிறது. தமிழ் மக்கள் அனைவரும் மீண்டும் ஒரு தடவை சமாதானத்திற்கான தமது விருப்பில் தாம் ஒன்றாக இருப்பதாக சர்வதேச உலகிற்கு சாட்சியம் பகர்ந்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து எமது சரித்திரத்தை நாமே எழுதத்தக்க விதமாக இத்தேர்தலில் வாக்களிக்கவேண்டும் என்ற எமது வேண்டுகோளை ஏற்றுச் செயற்பட்ட தமிழ்மக்கள் அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறவிரும்புகின்றோம். யுத்தம் வேண்டாம், சமாதானமே வேண்டும் என்ற இலங்கை வாழ் தமிழ்மக்களின் எண்ணப்பாட்டை முழு உலகும் தெளிவாக உணர்ந்துள்ள வேளையில், இனி நடைபெற இருக்கும் சம்பவங்கள் அனைத்தும் தமிழ் மக்களுக்குச் சாதகமாகவே அமையும் என நாம் நம்பிக்கையோடு எதிர்பார்க்கின்றோம். 20 ஆண்டு கால போர் அழிவுகளின் பின்னர் தமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான இவ்வேண்டுகோளை சர்வதேச உலகம் ஏற்று தமிழ் மக்களுக்கு நீதியோடு கூடிய ஒரு நிரந்தரத்தீர்வு கிடைக்க தமது பங்களிப்பைச் செய்யவேண்டிய முக்கியமான காலகட்டம் இதுவாகும் என்பதை மிக உறுதியாக வலியுறுத்த விரும்புகின்றோம்.

### சிங்களத் தலைவர்களுக்கு ஒரு வேண்டுகோள்

இலங்கை அரசியற் சரித்திர வரலாற்றில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த இரு கட்சிகள் இலங்கை மண்ணின் இறைமையையும் சுதந்திரத்தையும் கருத்திற்கொண்டு இலங்கை வாழ் தமிழ் மக்களுக்காக தம்மை ஏதோ ஒரு வகையில் விட்டுக்கொடுக்க வேண்டிய ஒரு காலகட்டம் உருவாக வேண்டும். இவ்விருகட்சிகளின் இரு பிரதான தலைவர்களாக ஜனாதிபதியும் பிரதமரும் இவ்விடயத்தில் பிரிந்துநிற்பது இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைத்தரப்போவதில்லை. பரம்பரை அரசியற் குடும்பத்தைச் சார்ந்த ஜனாதிபதி, இலங்கையில் தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை முதன்முதலில் பகிரங்கமாக ஏற்றுக்கொண்ட சிங்களத் தலைவர் ஆவார். இலங்கை மண்ணில் சமாதான முயற்சிகளை ஆரம்பித்தவரும் அவரே. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இலங்கை மண்ணில் சமாதானத்தை ஏற்படுத்தத் தம்மாலான அனைத்து முயற்சிகளையும் கடந்த காலங்களில் செயற்படுத்தியுள்ளார். இன்னும் குறிப்பாகச் சொலவதானால் இந்த இரண்டு தலைவர்களும் சமாதானத்தை முன்வைத்தே தேர்தலிலும் போட்டியிட்டுக் கணிசமான வாக்குகளைப் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் தமது [illegible] [illegible] நன்மை ஒன்றையே கருத்திற்கொண்டு தேசிய அரசு மூலமாகவோ அல்லது வேறு புரிந்துணர்வு முயற்சிகள் மூலமாகவோ இப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை ஏற்படுத்தவேண்டுமென இலங்கை வாழ் தமிழ்மக்கள் அனைவர் பெயராலும் வேண்டிக்கொள்கின்றோம்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு காலப்பொழுதில் மட்டக்களப்பு பிரதேசத்தில் நிகழ்ந்த மிகவும் துரதிர்ஷ்டவசமான ஒரு சம்பவத்தை இங்கு குறிப்பிடாமல் விடமுடியாது. இச்சம்பவமானது தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் வேதனையையும ஏற்படுத்தியிருக்கிறது. உயிர் இழப்புக்களாலும், இரத்தக்களரிகளாலும் பெற்ற இன்றைய அமைதியான நிலையையும் தமிழ் மக்களின் போராட்ட வாழ்வையும் அர்ப்பணத்தையும் பிரதேச வாதத்தினாலோ எந்தத் தனி மனித பிரிவினாலோ கூறுபோடவோ கொச்சைப்படுத்தவோ முடியாது என்றே நாம் கருதுகிறோம். தீமையிலிருந்து நன்மையையும் அழிவிலிருந்து ஆக்கத்தையும் தரவல்ல இறைவன் இச்சம்பவத்தை தமது வல்லமையால் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்கத்தக்கதாக நிச்சயம் மாற்றுவார்.

### சிங்கள - தமிழ் புத்தாண்டு வாழ்த்து

சிங்களத் தமிழ் புத்தாண்டும் வழமைபோல உயிர்ப்பு விழா காலப்பகுதியில மலர்கின்ற வேளையில், இப்புத்தாண்டினைக்கொண்டாடும் மக்கள் அனைவரையும் நினைத்து மனமகிழ்வோடு எம்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். சிங்களத்தமிழ்ப் புத்தாண்டு நடந்துமுடிந்த பொதுத்தேர்தலின் பின்னணியில் இலங்கைமண்ணில் அமைதியையும் சமாதானத்தையும் சுபீட்சமான எதிர்காலத்தையும் கொண்டுவர இறைவன் அருள் பாலிப்பாராக.

*மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை,*
*யாழ். ஆயர்.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விட்ட தவறுகளை உணர்ந்து புதிய ஆண்டில் புதுமை செய்வோம்

## ஆசிரியர் ஆறு. திருமுருகன் அழைப்பு

சென்ற காலத்தில் விட்ட தவறுகளை உணர்ந்து புதிய ஆண்டில் புதுமைகள் செய்ய முயல்வோம் என்று அழைப்பு விடுத்துள்ளார் ஆன்மீகப் பேச்சாளரும் ஆசிரியருமான ஆறுதிருமுருகன்.

அவர் வெளியிட்ட புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இனிய புத்தாண்டை இன்முகத்துடன் வரவேற்போம்; அன்பு, இரக்கம், அரவணைப்பு என்ற மனிதநேயப் பண்புகளுடன் இடரின்றி எல்லோரும் இன்புற்று வாழ இறைவனை இறைஞ்சுவோம். தாரண வருடம் தார்மீகம் நிலவும் வருடமாக, தர்மம் காக்கும் வருடமாக தளராத கீர்த்தி தரும் வருடமாக அமைய வேண்டும் என அனைவரும் பிரார்த்திப்போம். சென்ற வருடத்தில் நாம் சாதித்த சாதனைகளைத் தொடர்வோம். சென்றகாலத்தில் விட்ட தவறுகளை உணர்ந்து புதிய ஆண்டில் புதுமைகள் செய்ய முயல்வோம்.

எம்மை ஆளாக்கிய இனிய பெற்றோர்கள், என்றும் எமக்கு நல்வழி காட்டும் மூத்தோர்கள், அனைவரதும நல்லாசிகளையும் இந்நாளில் பெற்று உயவோம். நல்லன பல செய்து இவ்வுலக வாழ்வை நீத்த நன்றிக்குரியவர்களை இந்நாளில் நன்றியோடு நினைநது வணங்குவோம். எம் இனிய உறவுகளை நாடி அன்பால், பண்பால அவர்களை வாழ்த்தி அவர்களின் வாழ்த்தால் நாமும் வாழ புதிய ஆண்டின் புனித கைங்கரியங்களைத் தொடர்வோம். இறையருளால எல்லோரும் இன்புற்று வாழ இனிய புத்தாண்டு இனிதாய் மலரட்டும் - என்றுள்ளது.

# தாரண வருஷப் பிறப்பும் கைவிசேஷமும்

### வாக்கிய பஞ்சாங்கத்தின் பிரகாரம்

வருஷம் பிறக்கும் நேரம்: இன்று செவ்வாய் மாலை 4 மணி 5 நிமிடம்.
விஷு புண்ணிய காலம்: இன்று நண்பகல் 12 மணி 5 நிமிஷம் முதல் இரவு 8 மணி 5 நிமிஷம் வரை.

கைவிசேஷம்:

14.04.2004 புதன் - காலை 6.04 மணிமுதல் 6.52 வரை.
16.04.2004 வெள்ளி - மாலை 4.51 மணிமுதல் 5.39 வரை.
17.04.2004 சனி - காலை 6.30 மணிமுதல் 7.15 வரை.

ஆடை: சிவப்பு நிற ஆடை அல்லது சிவப்புக் கரையுள்ள ஆடை.

### திருக்கணித பஞ்சாங்கத்தின் பிரகாரம்

வருஷம் பிறக்கும் நேரம்: இன்று செவ்வாய் மாலை 6.32 மணி.
சங்கிரமண புண்ணியகாலம்: இன்று பிற்பகல் 2.32 மணிமுதல் இரவு 10.32 மணிவரை.

கைவிசேஷம்:

14.04.2004 புதன் - காலை 6.00 மணிமுதல் 6.34 வரை.
16.04.2004 வெள்ளி - மாலை 5.21 மணிமுதல் 6.09 வரை.
17.04.2004 சனி - காலை 6.33 மணிமுதல் 7.45 வரை.

ஆடை: செந்நிறப்பட்டு அல்லது சிவப்புக்கரை வைத்த வெள்ளை நிற ஆடை.

# நிரந்தர சமாதானத்தை உருவாக்குவதாக மலரும் புத்தாண்டு அமையவேண்டும்

யாழ்ப்பாணம்,ஏப்.13

இன்று மலரும் புத்தாண்டு குழப்பங்கள் மறைந்து நிரந்தர சமாதானத்தை உருவாக்கும் புத்தாண்டாக அமையவேண்டும் என்று தமிழ்க்கூட்டமைப்பின் இணைப்பாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

புத்தாண்டையொட்டி அவர் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளதாவது:-

இரண்டு வருட யுத்தநிறுத்தம், ஆறு சுற்றுப் பேச்சுகள் ஆகியவற்றுக்குப் பின்னர் பிறக்கின்ற மூன்றாவது தமிழ் புத்தாண்டு இது. பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டு, பெருந்தெருக்கள் திறக்கப்பட்டு மக்கள் ஓரளவு அமைதிச் சூழலைச் சுவாசிக்கும சூழ்நிலை ஏற்பட்டிருந்தபோதும் கூட, அது முழுமையானதாக இல்லை. அதி உயர்பாதுகாப்பு வலயங்களும், இராணுவ ஆக்கிரமிப்பும் இன்னும் மக்களை மிகவும் துன்பத்துக்கு உள்ளாக்கியே வருகின்றது.

மறுபுறத்தில் நடந்துமுடிந்த 13 ஆவது நாடாளுமன்றத் தேர்தலில்



தமிழ்மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மிக அதிகப்படியான ஆசனங்களுடன் வெற்றிபெறச் செய்துள்ளனா. எனினும், புதிய அரசாங்கம் அதனை உதாசீனம் செய்து தனது சொந்த நிகழ்ச்சி நிரலின் பிரகாரமே செயற்பட முனைகின்றது.

நிரந்தர யுத்த நிறுத்தம், நிரந்தரத் தீர்வு, அதற்கான பேச்சு என்பதற்குப் பதிலாக அரசியல் நிர்ணய சபையை உருவாக்கி, அதன்மூலம் அரசியல் சாசனத்தை மாற்றி, தான் பிரதமராக வேண்டும் என்பதே இன்றைய ஜனாதிபதியின் அவசரத் தேவையாக உள்ளது.

ஜே.வி.பி., ஹெல உறுமய போன்ற இனவாதக் குழுக்களின் தயவில் தங்கி இருக்கக்கூடிய ஜனாதிபதி பேச்சுக்களைச் சரியான திசைவழியில் முன்னெடுத்துச் செல்வார் என்று நம்புவதற்கான எந்த அடிப்படையும் இல்லை. அறுதிப் பெரும்பான்மையற்ற, குழப்பகரமான சிந்தனைகளின் மொத்த வடிவமாகவே இன்றைய புதிய அரசு இருக்கின்றது.

இவ்வளவு குழப்பங்களுக்கு மத்தியில் தமிழ்ப்புத்தாண்டு மலர்ந்தாலும் இப்புத்தாண்டு குழப்பங்கள் மறைந்து, நிரந்தர சமாதானத்தை உருவாக்கும் புத்தாண்டாக அமையவேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன் - என்றுள்ளது.

# புதிய அரசு தமிழ் மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளிக்கவேண்டும்

## தமிழ்க் காங்கிரஸின் வன்னி மாவட்டத்தலைவர்

வவுனியா,ஏப்.13

புதிய அரசானது தமிழ் மக்களுடைய உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய முன்வரவேண்டும்.

- இவ்வாறு அகில இலங்கைத் தமிழ்க காங்கிரஸின் வன்னி மாவட்டத் தலைவர் கே.ஏ. செந்தில்நாதன் விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் வடக்கு - கிழக்குத் தமிழர்கள் தமது எண்ணத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபை ஒப்படைக்கப்பட வேண்டும். தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதே அவர்களுடைய கோரிக்கையாகும்.

வடக்கு - கிழக்கில் வாழுகின்ற மக்கள் கடந்தகால யுத்த அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்கள் தங்களுடைய குடியிருப்புகளுக்குச் செல்ல முடியாதளவிற்கு உயர் பாதுகாப்பு வலயம் ஒரு தடையாகவுள்ளது. மக்களுடைய இயல்பு வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து இடம்பெயர்ந்தவர்கள் மீளக் குடியேற அனைத்து வசதி வாய்ப்புகளும் செய்து கொடுக்கவேண்டியது அரசின் கடமையாகும். அடுத்த புத்தாண்டை இடம்பெயர்ந்த மக்கள் மகிழ்ச்சிகரமாகக் கொண்டாட வழி செய்யப்படவேண்டும்.

நாட்டில் அமைதி, சமாதானம் தொடர்ந்து நீடிக்கவேண்டும் - என்றுள்ளது. (ம-8)

# அமைச்சர் டக்ளஸின் செய்தி

கொழும்பு,ஏப்.13

இந்தப் புதுவருடத்தில் இன ஐக்கியம் செழித்து வளர்வதற்கு ஒவ்வொருவரும் தத்தமது பங்களிப்பை வழங்க முன்வர வேண்டும்.

- இவ்வாறு அமைச்சரும், ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகமுமான கேஎன். டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள புதுவருட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்தப் புதுவருடத்தில் நாட்டில் நிரந்தர சமாதானமும் நீடித்த அமைதியும் நிலைபெற வேண்டும். இனங்களின் தனித்துவம் என்பது பகைமையை வளர்க்கும் கூறுகளாகவோ, முரண்பாடுகளை வளர்க்கும் பகுதிகளாகவோ அல்லாமல் இணக்கத்தை ஏற்படுத்தும் அம்சமாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இதன் மூலமாகவே இந்த நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலை பெறமுடியும்.

எல்லாரும் எல்லாம் பெற்று இந்த நாட்டில் அனைவரும் குதூகலமாக வாழும் சூழல் உருவாகத் தம்மாலான முயற்சிகளை வழங்கவேண்டும் - என்றுள்ளது. (ம-8)

# ஓவியப் பயிற்சிப் பட்டறை

சித்திரப் பயிற்சி நிறுவனம் மாணவர்களுக்கான இலவச ஓவியப் பயிற்சிப் பட்டறை ஒன்றை நடத்தவுள்ளது. நாளை புதன்கிழமை ஆரம்பமாகும் இந்தப் பட்டறை தொடர்ந்து மூன்று நாள்களுக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் தினம் காலை 9 மணி முதல் ஒரு மணிவரை நடைபெறும். தரம் 7இற்கு மேற்பட்ட மாணவர்கள் இதில் கலந்துகொள்ளலாம். இளம் ஓவியர்களை ஊக்குவிக்கும் வகையில் இந்த நிறுவனம் கடந்த ஆண்டும இந்தகைய பயிற்றிப் பட்டறையை நடத்தி இருந்தது. (ம)

# சம அந்தஸ்து உள்ளவர்களாக தமிழர்கள் வாழ வேண்டும்

## புத்தாண்டுச் செய்தியில் ஜயலத்

கொழும்பு,ஏப்.13

இந்த நாட்டில் தமிழர்கள் சம அந்தஸ்துடைய பிரஜைகளாக வாழவேண்டும் என்பதே எனது புதுவருடப் பிரார்த்தனையாகும்.

- இவ்வாறு ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன வெளியிட்டுள்ள புதுவருட வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-


மலரும் இப்புதிய ஆண்டு தமிழ் மக்களின் உரிமைகள் அனைத்தையும் பெற்றுத்தரக்கூடிய ஆண்டாக மலர வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். அத்தோடு நாட்டில் நிரந்தர சமாதானம் மலர வேண்டுமென்பதும், இந நாட்டில் தமிழர்கள் சம அந்தஸ்துடைய பிரஜையாக வாழவேண்டுமென்பதுமே எனது புதுவருடப் பிரார்த்தனையாகும்.



இந்தப் புதிய ஆண்டில் சகோதரத்துவமும் மனிதாபிமானமும் மக்கள் மனதில் ஏற்படவேண்டும். இனியும யுத்தம் ஏற்படாத சூழ்நிலை உதயமாகவேண்டும். இந்த ஆண்டில் தமிழர்கள் அனைத்து நலனையும் பெறவேண்டும்.

எந்தச் சூழ்நிலையிலும் தமிழர்களுக்காக நான் செய்யும் சேவையில் எவ்வித மாற்றமும் இருக்காது. அவர்களுக்காக என்னாலியன்ற அனைத்துச் சேவைகளையும் கடமைகளையும் நிறைவேற்றிக் கொடுப்பதற்கு என்னை அர்ப்பணிக்கத் தயாராக உள்ளேன் - என்றுள்ளது. (ம-8)

# இன ஒற்றுமை மலர ஒன்றுகூடிப் பிரார்த்திப்போம்!



மலர்கின்ற தமிழ் சிங்கள புத்தாண்டு 'தாரண' வருடம் என்ற நாமத்தோடு பிறக்கின்றது. இலங்கைத்தீவில் தமிழர், சிங்களவர் எனும் இன மத பேதமின்றி கொண்டாடப்படுகின்ற வைபவம் இதுவாகும்.

இவ் ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் இப்புத்தாண்டில் சமாதானமே முழு மூச்சாகக் கொண்டு புதிய அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும சமாதானத்தில் முழு நம்பிக்கையோடும் இதய சுத்தியோடும் ஈடுபடவும் -

இடைநிறுத்தப்பட்ட பேச்சுக்களை மீண்டும் புத்துயிர் ஊட்டி ஆக்கபூர்வமான முடிவுகளை மேற்கொள்ளவும்-

தமிழர் சிங்களவர் இன ஒற்றுமையோடு இலங்கைத்தீவில் சுதந்திரமாக சம உரிமையோடு வாழும் இரு பகுதியினருக்கும் பூரண இறை அருள் கிடைக்கவும் -

திரிகரண சுத்தியுடன் இந் இனிய நாளில் இறைவனைப் பிரார்த்தனை செய்வோம்.

சகல மக்களிற்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்து ஆசி கூறி அமர்கின்றோம்.

"இப்புத்தாண்டில் நிரந்தர சமாதானம் மலரட்டும்"

எல்லோரும் எல்லாம் பெற்றுச் சிறபுடன் வாழ்க".

*கா. சந்திரசேகர சர்மா*
*பொதுச் செயலாளர்,*
*சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்.*

# ஆங்கிலமொழி மூலமான கல்வித் திட்டம் தொடருமா?

கொழும்பு,ஏப்.13

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் அரச பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கில மொழிமூலக் கல்வித் திட்டம் புதிதாகப் பதவிக்கு வந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசால் தொடர்நது முன்னெடுக்கப்படுமா?

இத்தகைய கேள்வி தற்போது கல்வி வட்டாரங்களில் எழுந்துள்ளது.

முன்னைய அரசு அறிமுகப்படுத்தியுள்ள மும்மொழித் திட்டத்தை ஒழித்துவிடும்படி இப்போதைய அரசு ஜே.வி.பியினரால் நெருக்குதலுக்கு உள்ளாக்கப்படுமானால் அது பெரும ஏமாற்றத்துக்குரியதாகவே இருக்கும் என்று முன்னாள் கல்வி அமைச்சர் டாக்டர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

ஆங்கில மூலமான கல்வித் திட்டத்தை இந்த அரசு ஒழித்துவிடுமானால், எதிர்கால சந்ததியினருக்கு அது பெரும் அழிவையே கொண்டுவரும். இது ஓர் உலகமய சமுதாயம் சர்வதேச சமூகங்களுடனான தொடர்பாடல்களுக்கு ஆங்கிலம் அவசியமாகவுள்ளது என்று டாக்டர் கருணாசேன கூறினார். மும்மொழித் திட்டமானது, படிப்படியாக முன்னெடுக்கப்பட வேண்டிய தொன்றாகும். அதன் பெறுபேறுகளை ஒரே இரவில் அடைந்துவிடமுடியாது என்றார் அவர்.

[illegible] பெற்று அவைகளைப் பாடசாலைகளில் முறைப்படி ஆங்கிலத்தில் போதிப்பதற்காக முன்னைய அரசு ஆசிரியர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் பயிற்சியளித்து வந்தது என்று கூறிய முன்னாள் கல்வி அமைச்சர், இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் தான் விரும்பிய மொழியில் கற்பதற்கு உரிமை உண்டு. எந்தவோர் அரசும் மாணவரின் இந்த உரிமையை மறுக்க முடியாது - என்றார்.

பல்கலைக்கழகங்களின் ஒன்றிய அமைப்பாளர் ரவிந்திரா முதலிகே கருத்துத் தெரிவிக்கையில்:-

பாடசாலைகளில் ஆங்கிலம் மூலம் கல்வி போதிக்கும் முன்னைய அரசின கொள்கையை எமது ஒன்றியம் ஒரு போதும் எதிர்த்ததில்லை. ஆனால், ஆங்கிலத்தில் கற்பிப்பதற்குப் போதிய அளவிலான ஆசிரியர்களை அரசினால் வழங்கமுடியவில்லை. சிங்களம் மூலம் கற்பிப்பதற்கே போதிய அளவில் ஆசிரியர்கள் இல்லாதிருக்கும்போது ஆங்கிலத்தில் பாடங்களைக் கற்பிப்பதற்கான ஆசிரியர்களை அரசு எங்கே கண்டுபிடிக்கப்போகிறது. இந்தப் பிரச்சினையை முதலில் தீர்த்துவைக்க அரசு முதலில் முயற்சியெடுக்க வேண்டும் - என்றார். (ப)

# வெளிச்சக் கட்டை இல்லாமல் குடாக்கடல் மீனவர் சிரமம்

குருநகர்,ஏப்.13

யாழ். குடாக்கடலில் குருநகர் இறங்குதுறைக்கும் கல்முனைக்கும் இடையேயான கடற்பிரதேசத்தில் வெளிச்சக்கட்டை இல்லாத காரணத்தினால் மீனவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக இரவுநேரம் தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குவதுடன் உயிராபத்துக்களையும் சந்தித்துவருகின்றனர்.

பாஷையூர் புனித அந்தோனியார் கோயிலுக்குத் தெற்குப் பக்கமாக உள்ள கடற்பிரதேசத்தில் முன்னர் அமைந்திருந்த வெளிச்சக்கட்டையில் மின்இணைப்பு இருந்ததுடன், இடிதாங்கியும் காணப்பட்டது. யுத்தத்தினால் இந்த வெளிச்சக்கட்டை சேதமடைந்ததை அடுத்து இப்பிரதேசம் இருள் சூழ்ந்து காணப்படுகின்றது. இடிதாங்கியும் அழிந்துள்ளது. இதனால் இடியுடன் கூடிய மழைபெய்யும் வேளையில் மீனவர்கள் உயிரிழந்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று மீனவர்கள் எதிர்பார்க்கின்றனர். (ம-10-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## மணமகன் தேவை

யாழ்இந்து கௌரவ குடும்பத்தைச சேர்ந்த, பூசம் நட்சத்திரம், 33 வயது, 5′5½″ உயரமுடைய கொழும்பில் நல்ல சம்பளத்துடன் தரமான நிரந்தர வேலை பார்க்கின்ற மணமகளுக்கு தகுந்த வரனைப் பெற்றோர் எதிர் பார்க்கின்றனர். உள்நாடு விரும்பத்தக்கது. சீதனம் பேசித் தீர்மானிக்கலாம். முழுவிவரங்களுடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 2225, C/o உதயன், யாழ்ப்பாணம். (30802)

## மணமக்கள் தேவை

1956 இல் பிறந்த, பூசநட்சத்திரம், எஞ்சினியர் மணமகனுக்கு மணமகளும் 1960 இல் பிறந்த பூரட்டாதி நட்சத்திரம் மணமகளுக்கு மணமகனும் தேவை. தொடர்புகளுக்கு Lucky Anty T.P.: 021 222 6366. (30749)

## வாடகைக்கு

சங்கரத்தைச் சந்தியில் மேல் மாடிக் கடை ஒன்று வாடகைக்குண்டு. தொடர்பு Mr. மூர்த்தி சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டை. (30776)

## தவறிவிட்டது

NPHG - 0093 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் இலக்கத்தகடு திருநெல்வேலிச் சந்தைக்கும் பாற்பண்ணைக்குமிடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருநெல்வெலி சிவா ஸ்டோர்ஸில் கொடுத்துதவவும். (30776)

## கும்பாபிஷேகம்

கைதடி,ஏப்.13

கைதடி ஞானவைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 21ஆம் திகதி காலை 6.50 மணி தொடக்கம் 7.40 மணி வரையான சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தையொட்டிய கிரியாகால நிகழ்வுகள் எதிர்வரும் 19ஆம் திகதி இரவு 7.35 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரையும் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (ம-10-75)

## துரிதஅபிவிருத்தித் திட்டம் குறித்த கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஏப்.13

இந்த ஆண்டில் துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் குடாநாட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள் குறித்து உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்களுடன் கலந்துரையாடப்படவுள்ளது.

யாழ்பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா தலைமையில் எதிர்வரும் 16ஆம் திகதி காலை 10மணிக்கு யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும். (எ-185)

## இறுதியாட்டம்

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவை யாழ்.மாவட்ட ரீதியாக நடத்திய அணிக்கு ஏழு நபர் கொண்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த இறுதியாட்டத்தில் யாழ்பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணியும், கிராஸ் கொப்பர் வி.க.பி அணியும் மோதவுள்ளன. (ம-5)





காமாட்சி துணை
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# சிறி நகையகம்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

தரம் தரும் தனித்துவம் அதுவே சிறி நகையகத்தின் மகத்துவம்

A-9, மாம்பழச்சந்தி,
யாழ்ப்பாணம். (C/34452)(34-21-18-16) T.P.: 0777 285464
0777 329864.



வாடிக்கையாளர், நண்பர்கள் அனைவருக்கும்
எமது இனிய சித்திரைப் புதுவருட வாழ்த்துகள்

வானொலி, தொலைக்காட்சி, T.V, டெக், குளிரூட்டிகள், மின்விசிறிகள்,
மின்உபகரணங்கள் மற்றும் எலக்ரோனிக் பொருள்கள்,
KANCHAN மின்சார வீட்டுப்பாவனைப் பொருள்கள் யாவற்றையும்
பெற்றுக்கொள்ளச் சிறந்த இடம்.



# V.K.இராசரத்தினம்

95,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 2056
(21-18-16) (C/34399)



# தேசிய ஆங்கில டிப்ளோமா

குழந்தைகள் தாய்மொழியைக் கற்பதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட 24 புத்தகங்கள் கொண்ட தேசிய ஆங்கில டிப்ளோமா பாடநெறிக்கான மொத்தக் கட்டணம்: ரூபா 500/= மட்டும.
விண்ணப்பிக்க வேண்டிய முடிவு திகதி: 17.04.2004

**மாதிரி விண்ணப்பம் (வேறு தாளில் பூர்த்தி செய்யவும்)**

பெயர் :...............................................
முகவரி :...............................................
தே.அ.அ. இலக்கம் :...............................................
தெரிவுசெய்யும் பாடநெறி (ஒன்றினைத் தெரிவுசெய்யவும்)
☐ ஆசிரியர்களுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா
☐ அலுவலர்களுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா
☐ பொதுதொடர்பாடலுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா
☐ மாணவர்களுக்கான ஆங்கில டிப்ளோமா (8ஆம் வகுப்புக்கு மேல்)
திகதி :........................ ஒப்பம்: ......................

விண்ணப்பம் மற்றும் PSALMS TECHNOLOGIES என்ற பெயருக்கு DEHIWALA தபாலகத்தில் மாற்றத்தக்கதான ரூபா 500 /= இற்கான காசுக்கட்டளையை அனுப்பவேண்டிய முகவரி:

**Psalm Institute of Engineering and Technology**
22, 1/4. Galle Road,
Dehiwala.

குறிப்பு : எமது மாணவர்களுக்கான SAAMSTECH ஆ் April மாதத்துக்கான நேரடி வகுப்புகள் கொழும்பு(09). திருகோணமலை(10). வவுனியா(17). மற்றும் யாழ்ப்பாணம்(24) ஆகிய இடங்களில் நடைபெறும்.
(C/34449) (21-16-18)



அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
இன்றைய நவநாகரீகத்தின் எழிற்சோலை!
வனப்பூட்டும் வனிதையர் உடைகளின் இன்பமலர்சோலை

வாணி வாணி



# வாணி ரெக்ஸ்



*பேபி சூட்ஸ், பேபி புறக் *சேட்டிங் சூட்டிங்ஸ்
*ஸ்கேட் அன் பிளவுஸ் *சுடிதார் சல்வார்கமிஸ்
*லாச்சார் மற்றும் சாறிவகைகள் *திருமணப் பட்டுப் புடைவைகள்
இன்னும் பல
நியாயமான விலையில் பெற்றிட...

வாணி வாணி ரெக்ஸ் வாணி

இல.81, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
☎ 222 5578 (C/34374)(21-18-16)
இல. 10, 11, நவீன சந்தை(உட்புறம்),
சாவகச்சேரி.


# 13 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 04 | 12 |
| 02 | 04 |
| 1939 | 1991 |

## துரைராசா கோணேஸ்வரி

திதி: 18.03.2004

குலத்தின் இலக்கணமாய் அன்பின் பிறப்பிடமாய்
குடும்பத்தின் குலவிளக்காய் நம் அன்புத் தெய்வமாய்
என்றும் மறவாத அன்புடன் எமை அரவணைத்து
நாம் சிறப்போடு வாழ வழிவகுத்து
எங்கள் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் ஒளியூட்டிய
எங்கள் அன்புத் தாயே எம் உள்ளம் உள்ளவரை
மறையாது உங்கள் நினைவு

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

மோகனராஜ் (சுவிஸ்), கிரிராஜ் (சுவிஸ்), லதா (ஜேர்மன்), இந்துலதா (சுவிஸ்), உதயராஜ் (சுவிஸ்) மற்றும் மருமக்களான சுவேந்திரன் (ஜேர்மன்), சிவகுமாரன் (சுவிஸ்). வள்ளிநாயகி (சுவிஸ்). வசந்தராணி (சுவிஸ்). குமுதினி (சுவிஸ்) மற்றும பேரப்பிள்ளைகளான விதுசன் (சுவிஸ்), விதுரன் (ஜேர்மன்), வின்சி (ஜேர்மன்).

மு.துரைராஜா,
இல.93,சிவன்பண்ணை றோட்,
யாழ்ப்பாணம்.

(C/34455)(34-21-18-16)


புத்தாண்டை முன்னிட்டு விசேட சலுகை
2004 ஏப்ரல் 5 முதல் 30 வரை

# New Year Special Offer 05 to 30 April, 2004


## 3 Years Limited Warranty

| | | |
|---|---|---|
| Processor Intel. | Intel Celeron 2.0Ghz | Rs.47,750.00 |
| ASUS Mother Board. | Intel P4 2.0GHz | Rs.53,750.00 |
| Kingston Memory 128MB. | Intel P4 2.8GHz | Rs.57,750.00 |
| ViewSonic Monitor E55C. | Intel P4 3.0GHz | Rs.79,000.00 |

ASUS VGA 64MB Upgraded. *Kingston Memory Lifetime Warranty
Keyboard PS/2. Mouse PS/2.
FDD, HDD 40GB. P4 ATX Casing.
ASUS CDROM 52X.
ASUS Soundcard. Speaker.



*We are Selling Printer, Scanner, UPS, & Computer, Network Accessories..



## HP Deskjet 3535 color inkjet printer

Specification
* Up to 14 ppm black * Up to 10 ppm color
* Up to 2400-optimized dpi color (up to 2400 x 1200-optimized dpi color and 1200-input dpi)
* Up to 1 input trays * Holds up to 100 sheets * None (not supported)

Price: SL Rs: 5,750.00 * *Special Discount for Dealers**
Authorized Reseller: *Global Informatics (Pte) Ltd*

intel inside · EAST DRIVE · hp invent · ViewSonic · Kingston · ASUS

## Global Informatics (Pte) Ltd.
#379, Kasthuriyar Road
Tel :077 736 4247, 077 748 9361, 021 222 5736.


# மரண அறிவித்தல்

## மார்க்கண்டபிள்ளை சிவசுப்பிரமணியம்

(M.S. மாஸ்ரர்)

அராலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட மார்க்கண்டபிள்ளை சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியர் - உபஅதிபர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி) அவர்கள் 11.04.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டபிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் அமரர் இரட்ணசபாபதியின் அன்புச் சகோதரனும் அமரர் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் பேராசிரியர் சி.பத்மநாதன் (பேராதனைப் பல்கலைக்கழகம்), இராஜசேகரம் (ஆசிரியர் - யாழ்ப்பாணக் கல்லூரி), இராஜேஸ்வரி (ஆசிரியர், கண்டி), ஞானேஸ்வரி (ஆசிரியர் - கலைமகள் கல்லூரி), கலாநிதி செல்வரஞ்சிதம் (விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மலீலா, இராஜலட்சுமி (ஆசிரியர் - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), கருணைகிரிராஜா (கொங்கொங்) ஆகியோரின் மாமனாரும் ஹரிகரன், சுதர்சினி (கனடா), சிவதர்சினி, ஸ்ரீகரன், சிவசங்கர், சாரணியபானு ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.04.2004) புதன்கிழமை பிற்பகல் 1.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உறவினர்களும் நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.இராஜசேகரம்.
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. (30803) (26-18-16-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

# சிறிமீனாட்சி
## தங்க மாளிகை

187, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 6109
(சி-34401)



## விடியட்டும் எம் தேசம்

சுபாஷுவில் சுதந்திரக்காற்று
மெல்லென வீசியது....
சமாதானத் தென்றலுமிங்கு
தெம்மாங்கு பாடியது
இருளில் விடிவெள்ளியும்
தென்பட்டது...
மீண்டும் கருமேகம்
சூழ்ந்த வேளையிது
கனவுகள் கலையுமா?
ஏக்கத்தில் அலைமோதும் வேளையில்....
தாரண வருஷமாய் -
பாரினைக் காத்திட
தீமைகளைச் சலவைசெய்து
சரித்திரம் படைத்திட
சங்கமிக்கும் சித்திரை மகளே...
தொலையட்டும் நம் அவலம்
விடியட்டும் எம் தேசம்!

- எஸ்.மதன்.

நவாலியில்
தனித்துவமான பல்பொருள் வாணிப
சேவையை வழங்கும்
ஒரேயொரு நிறுவனம்

அனைத்துப்
பொருள்களையும்
பெற்றிட நாடுங்கள்:

சுதாஸ்
SUTHAS
SUTHAS

நவாலி
மகாவித்தியாலயம் முன்பாக,
நவாலி.

சுதாஸ்
நவாலி.
(சி-34296) (24)

அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எம்மினிய சித்திரைப் புதுவருட
நல்வாழ்த்துக்கள்!
அலுமினியம், பித்தளை, எவர் சில்வர்,
எனாமல், பிளாஸ்ரிக், வீட்டுப்பாவனைப்
பொருள்கள், கோயில் சாமான்கள்,
மலிவாகவும் தரமாகவும் கிடைக்குமிடம்!



## சிவன் மாளிகை (வ.து)

166,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 2996
(சி-34358)

அனைவருக்கும்
எம்மினிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்!
நவீன டிசைன்களிலான தங்க நகைகளை
நல்ல முறையில், குறித்த நேரத்தில்
உத்தரவாதத்துடன்
செய்து பெற்றிட சிறந்த இடம்:

## ஷீலா
SHEELA NAGAIYAGAM நகையகம்



177E, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
☎ 077 - 6120468
உரிமையாளர்: S.பாபு
(34400)


# புதுவருட வாழ்த்துக்கள்

பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!!
உங்களுக்கோர் நற்செய்தி





பாலர் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழக மாணவர் வரையான பாடப்புத்தகங்கள் மற்றும் K.T.அம்பிகைபாகனின் புலமைப் பரிசில் புத்தகம் 20% கழிவுடன் மற்றும் பாடசாலை தர உள்ளீட்டு மூலப்பொருள்களை அலுவலக அலுமாரி, அலுவலக மேசை, நூலக அலுமாரி மற்றும் அழிபொருள்களான பேப்பர் வகைகள், ஆய்வுகூட உபகரணங்கள், இரசாயனப் பொருள்கள், நுணுக்குக் காட்டி, தொலைநோக்கி, பாசிச்சாயத்தாள், வடிதாள் மற்றும் விளையாட்டு உபகரணங்க ளான கால்பந்து, வலைப்பந்து, ஈட்டி, குண்டு, தட்டு மற்றும் விஞ்ஞான உபகரணங்களான மனித உடல் பாகங் கள் (பிளாஸ்ரிக்), பரிசோதனைக் குழாய்கள், அளவு சாடிகள் மற்றும் புறஜெக்ரர்கள், அதற்கான திரை, றோணியோ இயந்திரம், கல்வி தொடர்பான விளையாட்டுப் பொருள்கள் சங்கீத வாத்தியக் கருவிகள் இவை அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.



குறிப்பு: பாடசாலைகளுக்கு
இலவச விநியோகம் செய்யப்படும்.

## ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்

212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:222 5542.
(சி-34360)

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது அன்பார்ந்த புதுவருட நல்வாழ்த்துக்கள்!


## ஜோ = எகட்டனின் ஜெசித்தாரா
## அன்ட்
## செனித் மாக்கெட்டிங் அட்வடைஸ்மன்ற் சிஸ்ரம்ஸ்

▲ மனைக்கு வெளியே ஒரு மனை - உங்கள் உணவகம் ஜெசித்தாராவின் விசேட தயாரிப்புகளான சிக்கன் புரியாணி வகைகள் மற்றும் சுவைமிக்க தயாரிப்புகளான சைவ, அசைவ உணவுப் பொதிகள் வழமைபோல தினமும் நண்பகல் 12மணி முதல் 3மணி வரை.
▲ குறைந்த விலை, நிறைந்த உணவு, சிறந்த தயாரிப்பு
▲ உங்கள் அபிமான.... சக்தி எவ்.எம். ஒலிப்பரப்புச் சேவையில் உங்களின் விளம்பரங்களும் ஒலிக்க வேண்டுமா? ஒரே வழி...

ஜோ ~ எகட்டனின்
## செனித் மாக்கெட்டிங் அட்வடைஸ்மன்ற் சிஸ்ரம்ஸ்

19/3, மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். T.P..: 0777032188
(C/34389)

## மோகன் வீடியோ & ஸ்ரூடியோ



மானிப்பாயில்
தனித்துவமான
சேவைகளை வழங்கி வருகின்றது
★வீடியோ படப்பிடிப்பு
★கறுப்பு, வெள்ளை படப்பிடிப்பு
★வீடியோ பிரதி வாடகை





யாழ். வீதி,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லங்கா எரிபொருள் நிரப்பு நிலையம்

## குகன் ஸ்ரோர்ஸ்

பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்




எமது நிறுவனம் 03.04.2004 இல் தனது முதலாம் ஆண்டு நிறைவினைப் பூர்த்திசெய்துள்ளது. எமது நிறுவனம் சிறப்பாக இயங்குவதற்கு ஆதரவு வழங்கிய அனைத்து ,வாடிக்கையாளர்களுக்கும் எமது சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

வாடிக்கையாளர்களின் வசதிகருதி எமது சேவையினை அதிகாலை 4.00 மணிமுதல் இரவு 11.00 மணிவரையும் நீடித்துள்ளோம் என்பதையும் அகமகிழ்வுடன் அறிபத்தருகின்றோம்.

சகலவிதமான எரிபொருள் வகைகளையும், அவற்றுடன் சேர்ந்த அனைத்து எண்ணெய வகைகளையும் ஒரே கூரையின் கீழ் நீங்கள் பெறுவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய இடம்:

**LANKA FILLING STATION**

*KUGHAN STORES*

Palaly Road, Thirunelvely. T.Phone. 021-222 5968.

(C/34454)(34-14-19)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 - 03 - 1934



மறைவு 05 - 05 - 2002

## அமரர் நாகமணி ஐயாத்துரை

திதி: 13.04.2004

ஆண்டுகள் இரண்டு கடந்து போய் விட்டாலும்
ஈண்டு உங்கள் நினைவோடு நாமிங்கு வாழ்கிறோம்
மீண்டு ஒருமுறை உம் திருமுகங்காண ஏங்குகின்றோம்.

ஊரெழு கிழக்கு, சுன்னாகம். - குடும்பத்தினர்.
(30812)(26-34-14-19)

# மரண அறிவித்தல்கள்

## செல்வி இராஜேஸ்வரி சிவசுந்தரம்

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடலை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேஸ்வரி சிவசுந்தரம் அவர்கள் நேற்று (12.04.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுந்தரம் மகோதரி ஆகியோரின் அன்பு மகளும் லலிதா (ஜேர்மனி), இராஜகோபால், வர்ணசோதி, உலகேஸ்வரி இரட்ணகோபால் (டோகா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஆனந்தராஜா (ஜேர்மனி), சின்னக்கிளி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அனிதா, அஜந்தா, விஜிதா, கிசோக்குமார், கிசோக்குமாரி ஆகியோரின் பெரியதாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (14.04.2004) புதன்கிழமை நண்பகல் அளவில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புளியங்கூடல் வடக்கு,* தகவல்:
*புளியங்கூடல்..* (30829)(37-12-17) மகோதரி குடும்பத்தினர்.

## செல்வி சிவரம்யா நந்தகுமார்

கனடாவைப் வசிப்பிடமாகக் கொண்ட செல்வி சிவரம்யா நந்தகுமார் கனடாவில் நேற்று (12.04.2004) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் செந்தில் செல்வி (கனடா) தம்பதிகளின் அன்பு மூத்தமகளும் ஆராத்தியின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற V.K. சபாரத்தினம் (கந்தர்மடம்) மற்றும் ஞானாம்பிகை (லண்டன்), காலஞ்சென்ற C.சபாரத்தினம் (கந்தர்மடம்) மற்றும் சிவபாக்கியம் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

*50 A, பலாலி வீதி,* தகவல்:
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.* (30818)(37-12-17) V.S.S.K. சிவகுருநாதன்.

## ஆஸ்பத்திரிக்கு சக்கர நாற்காலி

சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு சக்கர நாற்காலி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. மானிப்பாய் அரசினர் மருத்துவமனையில் பாவனையிலிருந்த, நோயாளர்களை ஏற்றிச்செல்லும் சக்கர நாற்காலியே இவ்வாறு பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வாட் மீள இயங்கத் தொடங்கி 18 மாதங்களாகிய போதிலும் சக்கர நாற்காலி இல்லாததால் அங்கு அவசர நோயாளர்கள் ஸ்ரெச்சர் மூலமே ஊழியர்களால் தூக்கிச் செல்லப்படுகின்றனர். (ஐ-117)


கொம்பியூட்டர்
பொலீமர்
இறபர் முத்திரை

இலவசம்

ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
மேலதிக விவரங்களுக்கு

யசோ,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(30331)(38)



**VACANCY**

*Analyst Programmers*

மேற்படி பதவியில் அமர்த்துவதற்கு குறைந்தது ஒரு வருட முன்னனுபவம் உள்ளவர்களிடமிருந்து (VB Programmers) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. உரிய ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு 14.04.2004, காலை 10.00 மணிக்கு வருகை தரவும்

Director

STP

Your Partner in IT solution

73, Palaly Road, Kantharmadam. T.P:222-2674














# 51 ஆவது அகவையில் ஈரவிழிகளுடன் 47 ஆவது நாள் நினைவஞ்சலி



தோற்றம் 13.04.1953 | மறைவு 27.02.2004

## அமரர் தம்பித்துரை சற்குணநாதன்

*(உரிமையாளர், நொதேண் என்ஜினியரிங் வேக்ஸ் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)*

அன்புக்கும் பண்புக்கும் உறைவிடமாய் இருந்த உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம வல்ல மருதடி விநாயகரின் பாதாரவிந்தங்களைப் பணிகின்றோம.

பெற்றோர், மனைவி, மக்கள். (30815)(37-12-17)

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் கந்தசாமி துஷ்யந்த் (துஷி)



யாழ்ப்பாணம், ஓட்டுமடத்தைச் சேர்ந்த 'ஈழநாடு' முன்னாள் ஊழியர் க.கந்தசாமி அவர்களின் கனிஷ்ட புதல்வன் செல்வன் துஷ்யந்த் அவர்கள் 1 .04.2004 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஓட்டுமடம்,* தகவல்:
*யாழ்ப்பாணம்.* (30824)(37-12-17) க.கந்தசாமி.

விஸ்வப்பிரம்மஸ்ரீ

## சின்னத்துரை நவரத்தினம்

(சிற்பாச்சாரியார்)



மயிலிட்டி வடக்கு, சிறீமுருகன் கனக சிற்பாலய பிரபல சிற்பாசாரியும் உரிமையாளருமாகிய சின்னத்துரை நவரத்தினம் அவர்கள் நேற்று (12.04.2004) திங்கட்கிழமை கோப்பாய், இருபாலையில் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தங்கப்பிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வனும் கனகசபை - இராசம்மா தம்பதிகளின் மருமகனும் தவமணிதேவியின் அன்புக் கணவரும் செல்வாம்பிகை, செல்வேந்திரன் (டோகா), செல்வசிறி, செல்வமனோகரி, செல்வசுதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகேஸ்வரி, சறோஜினிதேவி, இராசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் சிவரத்தினசிங்கத்தின் மாமனாருமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*வீரபத்திரகோவிலடி,* தகவல்:
*கோப்பாய் தெற்கு,* இராசலிங்கம்
*இருபாலை.* (30827)(40-12-17-37) (மருந்தன்- மைத்துனர்)

## திருமதி தங்கம்மா கந்தசாமி



சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற பேரம்பலம் கயிராசிப்பிள்ளையின் அன்பு மகள் தங்கம்மா கந்தசாமி நேற்று (12.04.2004) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளை கந்தசாமியின் மனைவியும் அருந்தவமாலா சத்தியேந்திரன் (ஆசிரியை ஏழாலை மகா வித்தியாலயம்), சிறீதரன் (ஜேர்மனி), பகீரதன் (சுவிஸ்), ஜீவரதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மரியநாயகம் (கொழும்பு), இராசம்மா (கனடா), இராசதுரை (ஏழாலை), தங்கவடிவேல் (மல்லாவி), கனகரத்தினம் (மல்லாவி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சவுந்தரம்மா தர்மலிங்கத்தின் மச்சாளும் சாந்தி (ஜேர்மனி), ரஜனி (சுவிஸ்), சத்தியேந்திரன் (D.O.A.S) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.04.2004) புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஏழாலை மத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஏழாலை மத்தி,* சு.சத்தியேந்திரன்
*ஏழாலை.* (30828)(12-17-37) (மருமகன்)

## P.C.யோகேந்திரன்



யாழ்ப்பாணம்,சுண்டுக்குழியைப் பிறப்பிடமாகவும், 261/11,கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட P.C.யோகேந்திரன் (முன்னாள் ஊழியர், C.T.B. யாழ்ப்பாணம்,SATA LLC - Muscat OMAN) அவர்கள் 11.04.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து பிலிப்ஸ் - சபினா பிலிப்ஸ் (தங்கம்) ஆகியோரின் அன்பு மகனும் சுகிர்தாவின் பாசமுள்ள கணவரும் சதீஸ், ஆனந்த், பிரதீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் இராஜேந்திரா, ஜெயவதி மனுவேற்பிள்ளை, நரேந்திரா, காலஞ்சென்ற மகிழ்வதி ஜோசப் மற்றும் பாலேந்திரா, காலஞ்சென்ற புகழ்வதி இராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வசந்தா அலோசியஸ் மற்றும் ரஞ்சினி செந்தில்நாதன், காலஞ்சென்றவர்களான ஜோண்கனகரட்டினம், திருமதி அரியமலர் பஸ்தியாம்பிள்ளை மற்றும் திவ்யம் கனகரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாருடைய நல்லடக்க ஆராதனை புதன்கிழமை 14.04.2004 பி.ப.4 மணியளவில் பாண்டியன்தாழ்வு புனித சந்தானமாதா கோவிலில் நடைபெற்று, புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
*261/11,கொழும்புத்துறை வீதி,* மனைவி,
*யாழ்ப்பாணம்.* (30810)(34-19-14) பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருணா வெளிநாட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அளித்த செவ்வியிலேயே அவா இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் வேணுகா மேலும் கூறியதாவது:-

கருணாவின் பிடியிலிருந்த விடுதலைப் புலிப் பெண்போராளிகளை அவர், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலையில் தனது முகாமில் ஒன்றுகூட்டினார். அப்போது அவரது விசுவாசியான நிலாவினி (சாளி), எம்மிடம் வந்து கொழும்புக்கு அழைத்துச்செல்வதாகக் கூறி எம்மை அழைத்தார். நாம் மறுத்துவிட்டோம்.

கருணாவிடம் சுமார் ஆயிரம் பெண போராளிகள் வரையில் மாட்டிக் கொண்டோம். மீனகம் முகாமில் சுமார் முந்நூறு பெண் போராளிகள் வரை எனது மேற்பார்வையில் இருந்தார்கள்.

பெற்றோர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலையிலிருந்தே முகாம்களுக்குள் புகுந்து விட்டார்கள். கருணா குழுவினரால் அவர்களை எதுவும் செய்ய முடியவில்லை.

ஞாயிற்றுக்கிழமை இரவு முதலே எமது முகாமிலிருந்து பெண் போராளிகள் தொகை தொகையாகப் புறப்பட்டு வீடுகளுக்குச் சென்றுகொண்டிருந்தார்கள்

ஞாயிற்றுக்கிழமை காலையில் கருணாவின் முகாமுக்குள் நாங்கள் அழைக்கப்பட்டபோது அவர்களில் மூன்றுபேரை மட்டுமே கருணா தன்னுடன் இணைத்துக்கொண்டார். தற்போது கருணாவுடன் ஆகக் குறைந்தது 10 பேர் வரை இருக்க முடியும்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

இதேவேளை -

கருணா தரப்பினரால் சிறை வைக்கப்பட்டிருந்த பொதுமக்கள் பலரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மட்டு-அம்பாறை மாவட்ட முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலனின் சகோதரரும் கருணாவின் பிடியிலிருந்து மீட்கப்பட்டிருக்கிறார்.

## 18 போராளிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிளான்ரின் முனையிலுள்ள 22 ஆவது படைப்பிரிவின் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

மட்டு - அம்பாறையைச் சேர்ந்த மேற்படி 18 பேரும் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்க படைத் தரப்பு நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.(ஐ-9-ரி)

## நாடு முன்னே...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)
டிக்கை எடுக்கப்படும்.

இப்போதைய ஜனாதிபதி முறையானது சிறுபான்மை மக்களுக்கு ஒரு பலமாக இருக்கிறது எனக் கூறப்படுவதும் இது ஒழிக்கப்படுவதற்கு எதிராக ஏற்கனவே, ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன என்பதும் சுட்டிக் காட்டப்பட்டபோது பிரதமர் கூறியதாவது:-

சிறுபான்மை மக்களின் மனோபாவங்கள் உணர்வுகளுக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். நாம் அவர்களுடன் ஆலோசனைகளை நடத்துவோம் கருத்துக்களை பகிர்ந்துகொள்வோம். எம்மை ஆதரிக்கும் படியாக அவர்களை வழிப்படுத்துவோம். பல நாடுகளில் வெஸ்ட்மின்ஸ்ரர் ஆட்சிமுறை அமுலில் இருக்கின்றது. அவை நன்றாகவே செயற்படுகின்றன என்றார் பிரதமர்.

## கதிரவெளி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மட்டக்களப்பைச் சேர்ந்த வேலுபாண்டி யன் -

இரண்டாம் லெப்டினன்ட் சங்கொலியன் என்று அழைக்கப்படும் கடுக்காமுனை, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பைச் சேர்ந்த கந்தசாமி அருட்செல்வம் -

வீரவேங்கை மலர்குமரன் என்று அழைக்கப்படும் மாவலையான், கரடியனாறு, மட்டக்களப்பைச் சேர்ந்த தங்கராசா குகன் ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ஐ-9-ரி)

## சபாநாயகர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை ஐக்கிய தேசிய முன்னணி கேட்டிருக்கிறது. தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு கூடி இது பற்றி முடிவு செய்யவிருக்கிறது.

எனினும், ஜாதிக ஹெலஉறுமய சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கும் பட்சத்தில் அந்தக்கட்சி போடடிக்கு நிறுத்துபவரே சபாநாயகராக தெரிவு செய்யப்படும் வாய்ப்பு கூடுதலாக உள்ளது. (ஐ-9)

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்)

## தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைத்தாலும் அரசு ஸ்திரம் கொணடதாக இருக்காது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இம்முறை புறந்தள்ளிவிட முடியாது.

இனிவரப்போகும் நாடாளுமன்றக் கூட்டங்களில் பேசப்படும் விடயங்கள் தொடர்பாக கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் கலந்து ஆலோசித்து பின்னரே எமது ஒவ்வொரு அரசியல் நகர்வுகளும் சூழ்நிலைக்கு ஏற்றவகையில் அமையும்.

- இப்படி சிவசக்தி ஆனந்தன் கூறினார். (ஐ-9-ரி)

## லாரா.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஆஸ்திரேலிய வீரர் மத்தியூ ஹைடன் பெற்ற 375 ஓட்டங்களே இதுவரையான அதிகூடிய ஓட்டச் சாதனையாக இருந்தது. கடந்த 2003 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பேர்த் மைதானத்தில் இடம்பெற்ற சிம்பாப்வேயுடான ஆட்டத்தின்போது அச்சாதனை நிகழ்த்தப்பட்டிருந்தது.

இதே மைதானத்தில், இதே அணியுடன், அதாவது இங்கிலாந்தின் அண்டிகுவா மைதானத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிராக 1994 ஆம் ஆண்டு நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் மோதலில், 375 ஓட்டங்களைப் பெற்று பிரயன் லாரா நிகழ்த்திய சாதனையே பின்னர் 2003 ஆம் ஆண்டு மத்தியூ ஹைடனால் முறியடிக்கப்பட்டது.

தற்போது, சரியாக பத்து வருடங்கள் கடந்து பிரயன் லாரா மீண்டும் தனது அதிரடித் துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

லாராவின் இந்த விளாசலில் 43 பவுண்டரிகளும் 4 சிக்ஸர்களும் அடங்கும். (ஐ-9)

# சமாதானம் நிலைபெற படைகள் ஒத்துழைக்கும்

### யாழ். தளபதி புத்தாண்டுச் செய்தி

யாழ்ப்பாணம்,ஏப்.13

கலாசாரத்திலும் மார்க்கத்திலும் சமமானவர்களாக விளங்கும் சிங்கள,தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை நிலைபெற இந்தப்புத்தாண்டு வழிகாட்டும். யுத்த நிறுத்த காலம் முதல் இன்றுவரை நாட்டில் உருவாகியுள்ள சமாதான சூழ்நிலையைத் தொடர்ந்து பேணுவதற்கு படையினர் முழு ஒத்துழைப்பு நல்குவர். யாழ்பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுசில சந்திரபால தனது புத்தாண்டுச் செய்தியில் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவரது புதுவருடச் செய்தியில்

யுத்த நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்காக பாதுகாப்புப் படையினருக்கு யாழ்ப்பாண மக்கள் வழங்கிவரும் ஒத்துழைப்பை நாங்கள் மிகவும் உயர்வாகக் கருதுகிறோம். எதிர்காலத்திலும் அப்படியான ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம்.

அண்மையில் பொதுத்தேர்தல் அமைதியாக நடைபெற்றதற்கு பொலீஸ் மற்றும் படையினர் கடமையில் ஈடுபட்டிருந்தமை மட்டுமன்றி, வடக்கு-கிழக்கில் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக யாழ்ப்பாண மக்கள் எடுத்த உற்சாகமும் காரணமாகும். அதற்காக அவர்களுக்கு நன்றி கூறுகிறோம். நிரந்தர சமாதானத்துக்கு இது உதவும் என்றும் நம்புகிறோம்.

நாடு பூராவும் எதிர்பார்த்திருக்கும் சமாதானத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பாதுகாப்பு படையினர் தம்மால முடிந்தளவுக்கு சேவை செய்வர் என உறுதியளிக்கிறோம். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## சுதந்திரக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலாசாரம் மற்றும் தேசிய வளம் போன்றவற்றை உள்ளடக்கும் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தை எவ்வித காரணங்களுமின்றி ஜனாதிபதி தனது நேரடிக்கண்காணிப்பீன் கீழ் கொண்டு வந்திருப்பது விரிசலை மிகப் பெரிதாக்கிவிட்டது என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது

## இராணுவ உளவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அழைத்துச் சென்றனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

கருணா தன்னுடன் நிலாவினி, தீந்தமிழ் ஆகிய இருவரை மட்டுமே அழைத்துச் சென்றுள்ளார் என்றும், எஞ்சிய ஒரு சில முக்கிய உதவியாளர்களைத் தன்னோடு கூட்டிச்செல்ல அவர் முயன்றபோதும் அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.

அரச படைகளின் பாதுகாப்புடன் கொழும்புக்குத் தப்பிச் சென்று பின்னர் அங்கிருந்து வெளிநாடு செல்வதே தனது திட்டம் என்று கடைசியாக மட்டக்களப்பில் போராளிகளைச் சந்தித்த போது கருணா கூறியிருக்கிறார்.

கருணா கொழும்புக்குத் தப்பி ஓடிவிட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் அவர் எவ்வாறு அங்கு சென்றார் என்பது தெளிவாகவில்லை.

மட்டக்களப்பில் இருந்து பொலனறுவை எல்லையில் உள்ள ஸ்ரீலங்கா படைத்தளம் ஒன்றுக்கு பாதுகாப்பாகச் சென்றடைந்த கருணாவும் அவரது ஆதரவாளர்களும் பின்னர் அங்கிருந்து ஹெலிகொப்டர்கள் மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது. எனினும், பாதுகாப்புப் படைத் தரப்பிலிருந்து அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

தொப்பிகல காட்டுப் பகுதி மீது வழமைக்கு மாறான திசையில் இரண்டு ஹெலிகொப்டர்கள் பறந்ததை தாங்கள் கண்டதாக கிராமவாசிகள் சிலர் கூறியிருக்கின்றனர்.

கிழக்கிலிருந்து வெளியேறிய நிலையில் கருணா எங்கு இருக்கிறார் என்பது தெரியவரவில்லை என்று கொழும்பில் உள்ள சில ராஜதந்திர வட்டாரங்கள் கூறின.

சரணடைவது தொடர்பான கோரிக்கை ஏதும் கருணா தரப்பிலிருந்து கிடைத்தால் மனிதாபிமான ரீதியில் அது பற்றி பரிசீலிக்கக் கூடும என்று பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் கூறினார் என்று பி.பி.ஸி. தெரிவித்தது. (ஐ-9)

## கருணாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பினை ஏற்படுத்தியுள்ளார் என்று கூறப்படும் தகவல்களை அவர் மறுத்தார்.

இதேவேளை -

கிழக்கில் இருந்து கருணா குழுவினர் ஹெலிகொப்டர் மூலம் கொழும்புக்கு தப்பி வந்து விட்டனர் என்று கூறப்படுவதை கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் மறுத்துள்ளன. (ஐ-9)

## கிழக்கிலிருந்து கருணா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
டன் அங்கிருந்து தப்பி ஓடிவிட்டார்.

கரடியனாறில் உள்ள தேனகம் என்னும் நடுவப் பணியக அலுவலகம் கொக்கட்டிச்சோலையில் உள்ள மீனகம் விருந்தினர் விடுதி, "தமிழ் அலை" பத்திரிகை நிறுவனம், தரவையில் உள்ள 'மீனகம்' இராணுவத் தலைமையகம் ஆகியவற்றை விட்டு கருணா அணியினர் விலகினர். இந்தப் பிரதேசம் உள்ளடங்கிய பகுதிகள் அனைத்தும் விடுதலைப் புலிகள் படையணியின் கட்டுப்பாட்டில் வந்தன.

கருணாவும் அவரது விசுவாசிகள் நூறுபேரும் தொப்பிக்கலக் காடு ஊடாக மின்னேரியா நோக்கிச் செல்கின்றனர் என்றும் -

அவரையும் அவரது விசுவாசிகளையும் கைதுசெய்யப் படையணிகள் நடவடிக்கைகளைத் தொடர்கின்றனர் என்றும் -

விடுதலைப் புலிகளின் மூத்த பிரமுகர் ஒருவர் நேற்று நண்பகல் தெரிவித்தார்.

இதற்கிடையில் -

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 'தேனகம்' அலுவலகத்தில் போராளிகளுக்கான கூட்டம் ஒன்றை கருணாவின் விசுவாசியான மகளிர் பொறுப்பாளர் நிலாவினி நடத்தினார்.

போராளிகள் எல்லோரையும் விரும்பினால் ஆயுதங்களைக் கையளித்து விட்டுப் பெற்றோரிடம் போகலாம் என அங்கு அவர் அறிவித்தார்.

அதையடுத்து சுமார் ஆயிரம் போராளிகள் அங்கிருந்து மட்டக்களப்பு நகருக்குப் புறப்பட்டனர்.

இதேவேளை, மட்டக்களப்பு விடுதலைப் புலிகளின் பிரதான முகாமான மீனகத்தில் கருணாவுடன் தங்கியிருந்த 3,000 இற்கும் மேற்பட்ட போராளிகள் நேற்று அங்கிருந்து வெளியேறி தமது வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

பெற்றோர் சென்றே தமது பிள்ளைகளை அழைத்து வந்துள்ளனர். நேற்று மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை உட்படப் பல்வேறு பகுதிகளும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துள்ளன.

கருணா குழுவினால் விடுவிக்கப்பட்ட பெரும்பாலானோர் புலி பாய்ந்தகல், பட்டிருப்புப் பாலம், செங்கலடிப் பாலம் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை சென்றடைந்துள்ளனர் என்று பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, வாகரைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் நேற்று தமது சொந்த இடங்களுக்குச் சென்றுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, வாகரையில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் வைத்து வயது குறைந்த புலி உறுப்பினர்களைப் பெற்றோர்களிடம் இன்று காலை 11 மணிக்கு ஒப்படைக்கவுள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஐ-3)


புதுவருட தினத்தில்

மாபெரும் இசைநிகழ்ச்சி

கலைப்பீட மாணவர் ஒன்றிய வளர்ச்சி நிதிக்காக
யாழ். முன்னணி "ராகம்ஸ்" இசைக்குழுவினருடன்
யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து வழங்கும்.

பொன்மாலைப் பொழுது

காலம்: இன்று (13.04.2004) செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 2.30 மணி
இடம்: கைலாசபதி கலையரங்கம்
யாழ். பல்கலைக்கழகம்
அன்பளிப்பு 50/=, 100/=
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
யாழ். பல்கலைக்கழகம். கலைப்பீட மாணவர் ஒன்றியம்
(30657)(37-12-17)

விளம்பர அனுசரணை: PALM BEACH RESTAURANT
HEAD: 10/11(49),Stanley Rd. Jaffna.
Branch: 169,Sir Pon. Ramanathan Rd. Thirunelvely.



IIS இன் இதயம் கனிந்த புதுவருட வாழ்த்துக்கள்

எமது அன்பிற்குரிய
மாணவர்கள், வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அன்பர்கள்,
நலன்விரும்பிகள் மற்றும் ஏனைய அனைவருக்கும் எமது இதயம்
கனிந்த புதுவருட நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில்
பெருமகிழ்ச்சியடைகிறோம்.

- Institute of Informatics Studies
- PC Paradise
- Sun Computers
- IIS Office Automation



DIP. IN HARDWARE
DIP. IN NETWORK
DAY CLASS BATCH - 16
ஆரம்பம்: 14.04.2004
குறுகிய காலத்தில் எங்களது வழமையான முழு அளவிலான செய்முறைப் பயிற்சி நெறியினை மேற்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.
SCC
No.43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.


## மரண அறிவித்தல்கள்

### சவரிமுத்து செபஸ்ரியாம்பிள்ளை (செவ்வேத்தி)



ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியாம்பிள்ளை (செவ்வேத்தி) அவர்கள் நேற்று (12.04.2004) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் லூர்த்தம்மாவின் அன்புக் கணவரும் ஞானம்மாவின் சகோதரரும், சகாயதேவி, சத்தியநேசன் (ஜேர்மனி), சற்குணதேவி, காலஞ்சென்ற சற்குணசீலன், சற்குணபாலன் (லண்டன்), சற்குணகாந்தன் (றொஷான் தையல்நிலையம் - புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்நேசன், அருள் செபஸ்ரியன், அருள்மதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (30832)(37-12-17)

தகவல்:
மனைவி - லூர்த்தம்மா.

### திருமதி சிவலோகநாயகி ஜெயச்சந்திரன் (தம்பையா)



அல்வாய் வடக்கைச் சேர்ந்த திருமதி சிவலோகநாயகி ஜெயச்சந்திரன் (தம்பையா) நேற்று (12.04.2004) திங்கட்கிழமை மாலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் ஜெயச்சந்திரன் (தம்பையா - ஓய்வு பெற்ற கிராமிய வங்கி முகாமையாளர் ப.நோ.கூ.சங்கம், புலோலி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கோவிந்தசாமி சொர்ணபாக்கியம் தம்பதிகளின் ஏகபுதல்வியும புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சிவதாஸ் (கச்சேரி - முல்லைத்தீவு), கலாநாயகி, சியாமளா, உதயணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திருமதி நரைத்தினம், காசிநாதன் மற்றும் பாலச்சந்திரன் ஆகியோரின மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று புதவுடல் சுப்பர்மடம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணேசவாசம்,
அல்வாய் வடக்கு அல்வாய் (30830)(37-12-17)
திரு. மு. ஜெயச்சந்திரன் தம்பையா

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.04.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன் புதுவருட சிறப்பிதழ்

# மங்களம் நிறைந்த மகத்தான வாழ்வு மலர சித்திரைப் புத்தாண்டே சிறப்புடனே வருக!

இன்று பிறந்திருக்கும் சித்திரைப் புத்தாண்டு தமிழர் தம் வாழ்வில் நிம்மதியையும் அமைதியையும் சுபீட்சத்தையும் தரும் வகையில் மங்களகரமாகப் பிறந்திருக்கின்றது. சமத்துவம் கலந்த சமாதானத்தையும் உண்மை நிறைந்த ஒற்றுமையையும் கௌரவம் மிக்க வாழ்வையும் ஏற்படுத்தும் என்ற நம்பிக்கையுடன் சூரியதேவனானவன் தனது கதிர்களைப் பரப்பியவண்ணம் கிழக்கு வானில் உதித்தெழுகின்றான்.

இற்றை நாள்வரை பட்டதுன்பங்களும் துயரங்களும் இன்னல்களும் இடுக்கண்களும் ஆதவனைக் கண்ட பனி போல அகன்று விடும், நாம் சந்தோஷமாகவும் மகிழ்ச்சியாகவும் இனபந்துக்களுடன் ஒன்று சேர்ந்து இன்பமாக வாழலாம் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் துயிலெழுந்து சித்திரைப் பெண்ணை வரவேற்கின்றனர்.

இருகரங்கூப்பிச் சிரந்தாழ்த்தி வணங்கி வாழ்த்திக் குதூகலத்துடன் வாழ்க்கையைத் துவங்கிய தமிழர்தம் வாழ்வில் வசந்தம் தலைதூக்க ஞாயிறு கதிரொளி வீசிப் புறப்பட்ட வேளை ஆலய மணியானது ''டான்'', ''டான்'' என்று ஒலி எழுப்பியது எல்லோர் மனத்திலும் அவர்களுடைய எதிர்பார்ப்புக்குக் கட்டியங் கூறுமாற்போலிருக்கிறது.

பழையன கழிந்து புதியன புகுமாற்போல இன்று பிறந்துள்ள தாரண வருஷமானது கஷ்டங்கள் யாவற்றையும் களைந்து துன்பங்கள் எல்லாவற்றையும் துடைத்து ஓர் இனிய புத்தாண்டாக, இனிக்கும் நிகழ்வுகளைத் தரும் மகத்தான ஆண்டாக மிளிரப் போகின்றது. மங்களம் பொங்கும் இந்தத் தாரண வருஷம் மக்கள் மத்தியில் அன்பையும் அற உணர்வையும் ஆத்மீக உறுதிப்பாட்டினையும் ஏற்படுத்தி உன்னதமான இலட்சியம் நிறைந்த மனித சமுதாயம் உருவாக வழி வகுக்கும் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை. உலகெங்கணும் பகை விலகி, பஞ்சம், மறைந்து, மங்களம் பொங்க வேண்டும் என்ற நோக்கில் வாசலில் மெழுகி, மாக்கோலமிட்டு, பூரண கும்பம் பொலிவுடன் வைத்து, மகரதோரணம் கட்டி, மாவிலையிட்டு, மாலை சூட்டி, சூரியனுக்குப் பொங்கல் வைத்து, போற்றி வணங்கும் மரபு தொன்றுதொட்டு நிலவி வருகிறது.

புத்தாண்டினை இன்முகத்துடன் வரவேற்று புத்தாடையணிந்து தெய்வத்தை வழிபட்டு வணங்கி கண்ணாடி, குங்குமம் முதலிய மங்கலப் பொருள்களைத் தரிசித்து மகிழ்வுறும் மக்கள் மனநிறைவோடு முகத்தில் பூரண பொலிவு வரப் பெற்றவர்களாக இன்புறுதல் இன்றைய நிகழ்வாகும்.

**இ.ஶ்ரீதரன்**

குதூகலம் நிறைந்த உள்ளத்துடன் துயில் நீத்து எழுந்து, பண்பொழுக்கம் பேணி, உடல்செழிக்கும் வகையில் மருத்து நீர் தேய்த்து, நீராடி அதிகாலையிலேயே ஆலயதரிசனஞ் செய்து மகிழ்வோடு மக்கள் உலாவருங்காட்சி மகோன்னதமானது.

இன்றைய புத்தாண்டு நன்னாளில் சுபநேரம் பார்த்துக் கைவிசேசம் பரிமாறி சுற்றத்தவர்களுடன் ஒன்றுசேர்ந்து உண்டு மகிழ்வர். இனிய புத்தாண்டு எல்லோருக்கும் இன்பத்தை அள்ளித்தரும் என்று கூறி இனிப்பான பட்சணங்களை, தித்திப்புடன் கலந்து தெவிட்டாமல் வழங்கி இன்புறுவர்.

வாழ்க்கையில் எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது சகஜம். ஆகவே, சொந்த பந்தங்களுடன் உறவு கொண்டாடி மகிழ்வுடன் மாட்சிமை நிறைந்த மகத்தான வாழ்வுக்கு வழி சமைத்துத் தர வேண்டுமென்று ஆதவனுக்குப் பொங்கலிடுவார்கள். இன்றைய புத்தாண்டுப் பொங்கலானது இனிமையான சுவையைத் தரவல்ல இனிப்புப் பொங்கலாகப் பொங்கும்போது, பொங்கற்பானையில் வரும் பொங்கல் பொங்கிச் சரியும்போது கிழக்கு நோக்கிச் சரிந்து உதய சூரியன் உன்னதமான வாழ்வு அருளுவான் என்பதற்குச் சான்று பகருமாப் போல் மங்கலத்தைக் காட்டி நின்றது.

உள்ளத்தில் உவகை பொங்க, கள்ளங்கபடமற்ற மக்கள் தமது வாழ்வில் வசந்தம் வீச வேண்டுமென்று எல்லாம் வல்ல பரங்கருணைத் தடங்கடலாக விளங்குகின்ற பரம்பொருளை இறைவனைப் பணிந்து போற்றித் துதிப்பது இன்றைய மங்கல நிகழ்வாகும்.

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே''

என்று சீர்காழி வேந்தரான நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமான் பாடிய தேவாரம் அழகாக் கூறிநிற்பது இன்பமான மங்கள வாழ்வையே.

என்வே, இன்று பிறந்துள்ள புத்தாண்டில் கஷ்டங்கள் யாவும் விலகி, இன்பம் மலர்ந்து மங்களம் நிறைந்த சந்தோஷமான சகவாழ்வுக்கு இறைவன் எமக்குப்பேரருட் கருணையை அள்ளி வழங்கவேண்டுமென்று அவனருளாலே அவன்தான் பணிந்து அவனருளையே வேண்டி நிற்போமாக.

''நம்பினார் கெடுவதில்லை நான்கு மறைத் தீர்ப்பு'' .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புதுவருட சிறப்பிதழ்

தித்திக்கும் திருநாளாம் இத்திருநாளில் அன்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எம்மினிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

வண்ண வண்ண ஆடைகள்
எத்தனையோ அத்தனையும்
உங்கள் எண்ணம்போல்
தெரிவு செய்திட

## கோபிகா ஆடையகம்

இல. 5/4, நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம்மினிய சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்

## கௌரி ரெக்ஸ்ரைல்ஸ்

ஆடவர், சிறியோர் முதல் பெரியோர் வரை
மகளிர் அனைவருக்கும் மாறா நவீனஸ்ரைலுக்கு
ஏற்ற ஆடைத்தெரிவுகளுக்கு

22 (92), நவீன சந்தை, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

புதுயுகம் மலரும் சித்திரைப் புத்தாண்டில்
சிறப்புடன் வாழ எமது நல்வாழ்த்துக்கள்!

நவீன அழகிய
சிங்கப்பூர்
நகைகளுக்கு!

## சிங்கப்பூர் ஜுவல்லறி

93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 2223327

எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட நல் வாழ்த்துக்கள்!

அனைத்து வகை சைவ, அசைவ உணவுகளுக்கு

## மூன்று நட்சத்திர உணவகம்

## THREE STAR HOTEL

இல. 162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில்.

T.P: 021 2223590

**செல்வம் ஸ்ரோர்ஸ்**
322A ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 2223605

சுவையின் சங்கமம்
வீட்டுச் சாப்பாடு...!
ஹோட்டலில்!

**போன் சொப்**
10, நவீன சந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.
T.P: 021 2223817, 021 2227125, 0777 111460

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!



வவுனியா நகரில்
24 மணிநேர
சேவையாற்றி
மக்களின்
நன்மதிப்புப் பெற்ற



## ஸ்ரீவாணிவிலாஸ் சைவ உணவகம்

உங்கள் உணவுத்தேவையை
பூர்த்திசெய்ய விஜயம் செய்யுங்கள்.

சைவமும் தமிழும்
செழித்தோங்கும்
யாழ்ப்பாணத்திற்கும்
வந்து விட்டது.


## ஸ்ரீவாணிவிலாஸ் சைவ உணவகம்

இல. 372, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 071 - 2370211

E.mail - vani@wow.lk

இல. 144, கண்டி வீதி,
வவுனியா.
T.P: 024 - 4589777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## இந்த வருடம் புத்தாண்டை குதூகலமாக கொண்டாடுங்கள்

புத்தாண்டு காலத்தில் வெளிநாட்டிலுள்ள உங்கள் உறவினர், நண்பர்களிடமிருந்து வெஸ்டர்ன் யூனியன் மூலம் பணத்தை பெற்று பண்டிகையை குதூகலமாக கொண்டாடுங்கள்.

உலகின் எப்பகுதியிலிருந்தும் விரைவாகவும் இலகுவாகவும் பாதுகாப்பாகவும் நம்பிக்கையாகவும் இலங்கையில் பணத்தைப்பெற வெஸ்டர்ன் யூனியனின் பணமாற்றல் சேவையை பயன்படுத்தும் ஏனையோருடன் நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.

உலகெங்கிலும் லட்சக் கணக்கானோர் வெஸ்டர்ன் யூனியனில் நம்பிக்கை வைத்துள்ளார்கள்.

108 செலான் வங்கி கிளைகளிலும் 152 மக்கள் வங்கி கிளைகளிலும் இச்சேவையை பெறலாம்.

வெஸ்டர்ன் யூனியன்
உலகெங்கிலும் பணத்தை அனுப்பவும் பெறவும் அதிதுரித வழி.

**ஹொட்லைன் : 2452666**

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

WESTERN UNION பணப் பரிமாற்றல்
உலகளாவிய ரீதியில் பணம் அனுப்பவும் பெறவும் அதிதுரித வழி

மக்கள் வங்கி

தலைமையகம்: செலிங்கோ செலான் டவர்ஸ், 90 காலி வீதி, கொழும்பு 3.
தொ.பே: 011-4701000 பெக்ஸ்: 2456456, ஈ-மெயில்: info@seylan.lk
வெப்சைட்: www.eseylan.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புதுவருட சிறப்பிதழ்



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர் – 2004

# சிந்தனையில் மாற்றம்; செயலில் உத்வேகம் தாரண வருஷம் தரும் எனப் பிரார்த்திப்போம்

ஈழமணித் திருநாட்டில் வாழும் பூர்வீகக் குடிமக்களாகிய தமிழ்க ளும் சிங்களவர்களும் சித்திரை வருட பிறப்பையே தமது புத்தாண்டு தின மாகக் காலங்காலமாகக் கொண்டாடி வருகிறார்கள்.

வானவியல் சாஸ்திரமும் சோதிட சாஸ்திரமும் ஒன்றோடொன்று தொடர் புடையவையாகும். சோதிட சாஸ்திரம 12 ராசிகளையும் 27 நட்சத்திரங் களையும் குறிப்பிடுகின்றது. முதலா வது இராசியாகிய மேட இராசியில் சூரியபகவான் பிரவேசிக்கும் தினமே புதுவருடப்பிறப்பு ஆகும். 60 வருடங் கள் ஒரு சுற்று வட்டத்தில் கூறப்படு கின்றது. இதில் 18ஆவது வருடமா கிய தாரண வருஷம் சித்திரை மாதம் முதலாம் திகதி (13.04.2004) செவ் வாய்க்கிழமை பி.ப 4.05 இல் பிறக் கின்றது என வாக்கிய பஞ்சாங்கமும் மாலை 6.32 இல் பிறக்கின்றது எனத் திருக்கணித பஞ்சாங்கமும் குறிப் பிடுகின்றன.

இப் புதுவருடதினத்தில் வரும் புண்ணிய காலத்தில் சகலரும் மருத்து நீர் தேய்த்து ஸ்நானம் செய்து நித் திய கர்மானுஷ்டானங்களை முடித்துக் குலதெய்வத்தைத் தரிசனம் செய்தல் வேண்டும். இறைவனுடைய ஆசீர் வாதத்துடனேயே புதுவருடக் கரும காரியங்களை ஆரம்பித்தல் வேண்டும். கண்ணால் காணும் தெய்வமாக இருக் கின்ற சூரிய பகவானுக்குப் பொங்கல் பூஜை நமஸ்காரங்கள் செய்தல் வேண்டும்.

**பெரியோர் ஆசீர்வாதம் பெறுக!**

ஒவ்வொரு தனிமனிதனின் வாழ் வின் உயர்விற்கும் அவனுக்குக் கிடைக் கும் ஆசீர்வாதங்களே காரணங்களாக உள்ளன. சாபங்கள் அவனுடைய வாழ் வையே சீரழித்துவிடும். இந்துக்க ளின் ஞானக்களஞ்சியமாகவும், அறி வுப் பொக்கிஷமாகவும் திகழும் நூல கள் உபநிடதங்களே ஆகும். குரு குலக் கல்வியை முடித்து வெளியே றும் மாணவனுக்குக் குரு செய்யும் ஆசீர்வாத உரையினைத் தைத்திரிய உபநிடதத்திலே காணலாம்.

அறத்தைச் செய் (தர்மம் சர), உண் மையைப் பேசு (சதயம் வத), மாதா வைத் தெய்வமெனப்போற்று (மாத்ரு தேவோ பவ), பிதாவைத் தெய்வ மெனப்போற்று (பித்ரு தேவாபவ), குருவைத் தெய்வமாகப் போற்று (ஆசார்ய தேவா பவ) என்ற அறிவு ரைகளைக் குரு தனது சிஷ்யனுக்கு வழங்குகின்றார். இந்த மண்ணிலே வந்து பிறப்பதற்கு முன்பு நாம் அனை வரும் நம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய தாயின் வயிற்றில் இருந் திருக்கின்றோம். குடியிருந்த கோயி லாக இருக்கின்ற தாய் முதல் வணக கத்திற்கு உரியவளாகின்றாள்.

'ஈன்று புறம் தருதல் என்தலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே'

என்றே சங்கத்தமிழ் நூலாகிய புறநானூறு குறிப்பிடுகின்றது. நாம் இந்த மண்ணிலே தோன்றுவதற்கு மூலகாரணமாக இருந்ததோடு நமக்கு ஞானத்தையும், அறிவையும் தந்து மனித விழுமியங்களை மதிக்கும் பண் புடையவர்களாக உருவாகுவதற்கு தோன்றாத் துணையாக இருந்த தந்தை யும் வணக்கத்திற்கு உரியவராகவே திகழ்கிறார்.

இதேபோல, அறிவுக்கண்ணைத் திறப்பதற்குத் துணையாக இருந்த ஞான விளக்காகிய ஆசிரியரும் காணப்படு கின்றார்.

புதுவருடத்தினத்தன்று தாய், தந்தை, குரு ஆகிய மூவருடைய ஆசீர் வாதத்தையும் ஒவ்வொருவரும் பெற் றுக்கொள்ளுதல் வேண்டும்.

**சுற்றத்துடன் இணைந்து வாழுங்கள்**

உறவினர்கள், நண்பர்கள் ஆகி யோருடன் இணைந்து வாழ்தலே சிறப பான வாழ்வு ஆகும். சமூக இசைவாக கம் பெற்று வாழமுடியாது பரிதவிக் கும் அறிவாளிகள் பலரை நாம் நமது சமூகத்திலே காணலாம். பெரும் பட் டங்கள், பதவிகள் பெற்ற பலர் தாம வாழும் சமூகத்தில் இருந்து பிரிந்து வாழ்கிறார்கள். உலகத்தோடு பொருநத ஒழுகுதலைக் கற்காதவர் பல நூல்க ளைக் கற்றவராக இருந்தாலும் அறிவு இல்லாதவராகவே கருதப்படுவார்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவ இல்லாதார்"

என்றே தமிழ் மறையாகிய திருக் குறளும் செப்புகின்றது. புதுவருட தினத்தன்று விருந்தினர்கள், நண்பர் களை வரவேற்று உபசரித்து விருந் தோம்புதல் செய்தல் வேண்டும்.

**நல்லனவற்றை நினைந்தூர் ஏய்க!**

புதுவருட தினமாகிய புண்ணிய நாளில் நாம் ஒவ்வொருவரும் நம்மை அகவிசாரணைக்கு உட்படுத்த வேண் டும்.

"தன்னையறியத் தனக்கொரு கேடில்லை" என்றே தமிழ் மந்திரமா கிய திருமந்திரமும் குறிப்பிடுகின்றது. அக விசாரணை செய்து நம்மிடம் உள்ள தீய பழக்கங்களை நாமே அகற்றிவிட வேண்டும்.

தன்னுடைய சொந்த வாழ்வில் சுய கட்டுப்பாட்டை உருவாக்கிக் கொள் ளும் ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வில் உயர்ச்சி அடைவான். புது வருடப் பிறப்பை வெறும் பண்டிகை யாகவோ, சடங்காகவோ மாத்திரம் கொண்டாடுவதால் எதுவித பயனும் இல்லை.

**சிந்தனை மாற்றம் தேவை**

புது வருடப்பிறப்பு நமது சிந்த னையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். செயலில் உத்வேகத்தைத தர வேண்டும். வாழ்வில் மலர்ச்சியை யும், மகிழ்ச்சியையும் உருவாக்க வேண்டும். சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு பெறுவதற்கும் தகமை சிவஞானமுத்தியும் பரகதியும் கிடைப் பதற்கும் தாரண வருடப்பிறப்பு அனை வருக்கும் வழிகாட்ட வேண்டும். ★

சிவத்தமிழ்வித்தகர் சிவ.மகாலிங்கம்
உதவிப் பணிப்பாளர்,
இந்து விவகார அலுவல்கள் அமைச்சு.

# சைவத் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வியலுடன் இரண்டறக் கலந்திருந்த பெரும் சிறப்புடையது வெற்றிலை!



## சித்திரைப் புதுவருட காலத்தில் அதன் மதிப்போ பலமடங்கு

சைவத் தமிழ் மக்களது வாழ்வி யல்புகளில் அன்றும் இன்றும் என் றும் பிரிக்கமுடியாதவாறு அன்றாடம் மிக மிக உபயோகத்திலுள்ள அதி உயர்வான ஒரு பொருள் வெற்றிலை.

வெற்றிலையைச சைவத் தமிழ் மக்கள் இலச்சுமி எனக் கொள்வர். அது இலட்சுமிகரமானதும்கூட. வெற் றிலையைப் போன்ற பசுமைப்பயிர் வேறெ துவும் இல்லை. செய்கையாளர்களுக் குச் செல்வத்தை அள்ளிச் சொரியும் சிறப்பும் வெற்றிலைக்கு உண்டு.

திருக்கோயில் உற்சவங்களில் வெற்றிலை இன்றிக் கற்பனை பண் ணிக்கூடப் பார்க்கமுடியாது.

விவாகம், புதுமனைப் பிரவேசம், பூப்புனித நீராட்டு விழா, ஏடு தொடக குதல் உட்பட அனைத்து சடங்குக ளிலும் வெற்றிலைக்கு முதலிடம் உண்டு. பொதுவாக மங்களகரமான சமய, சமூக நிகழ்வுகள் அனைத்தும் வெற் றிலை இனறி நடைபெறுவதில்லை.

வெற்றிலையில் பழம், பாக்கு, மஞ சள், பூக்கொண்டு தங்கப் பவுணை அன்பளிப்பாக வைத்து மணமக்களை "என்றும் நலமாக இருப்பீர்களாக!" என வாழ்த்துவது பெரியோர்களது வழ மையாகும். அது இதயபூர்வமான வாழ்த்துமாகும்.

**இதயம் போன்றது**

தமது இதயத்தை அர்ப்பணிப்ப தாகவே சைவத் தமிழ் மக்கள் திருக் கோவில்களில் ஆண்டவனுக்கு வெற்றி லையைச் சமர்ப்பிக்கின்றனர். வெற்றிலை மனிதனின் இதயத்தின் விம்பம் போன் றது என்பது அவர்களது நம்பிக்கை.

ஓர் ஆத்மா அமைதி அடைந்த பின அதற்குரிய கிரியைகளிலும் வெற்றி லைக்கு முக்கிய இடம் உண்டு.

இணுவிலைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியரான சோதிலிங்க சுவாமி- கள் வெற்றிலையின் மருத்துவப் பயன பாடுகள் பற்றிக் கூறுகையில், அது மிகமிக காரசாரமான மூலிகைக் கொடி எனத் தெரிவித்தார். எல்லாவிதமான நோய்களின் மருத்துவப் பயன்பாட் டிற்கும் இயற்கை அன்னை பொருத் தமும் சிறப்பும் மிக்க மூலிகைகளைப் படைத்துள்ளாள் என்று கூறிய சுவாமி கள், அவற்றுள் வெற்றிலையும் ஒன்று எனத் தெரிவித்தார்.

**கிருமிநாசகாரி**

வெற்றிலை வாயின் துர்நாற்றத் தைப் போக்கி கிருமிகளையும் அழிக் கவல்லது. உணவைச் சீரணிக்கச் செயயும் சக்தியும் அதற்கு அதிகம். குடலிலுள்ள கிருமிகளையும் அது கொன்றொழிக்கும் திறன் படைத்தது.

குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரது சளி உபாதைகளுக் கும் வெற்றிலை நிவாரணம் அழிக்க வல்லது. பாட்டி வைத்தியத்திலும் அதற்கு முக்கிய இடம உண்டு. பிஞ் சுக் குழந்தைகளின் சளி உபாதைக ளைப் போக்க அந்தக் காலத்தில் பாட்டிமார் வெற்றிலையைப் பெரிதும் பயனபடுத்தியதுண்டு. ஆயுர்வேத எண்ணெய் தடவிய வெற்றிலைகளை நெருப்பில் வாட்டிக் குழந்தைகளின் நெஞ்சில் பதித்துவிட அவர்கள் சளி உபாதைகள் நீங்கிச் சுகம்பெறுவர்.

கிராமப் புறங்களில் புதுமணத் தம பதிகள் சல்லாபம் உல்லாசமாக உரை யாடுகையில் தாம்பூலம் சுவைத்து இன்புறுவதுண்டு.

தாய்மைப் பேறடைந்த பெண்கள அழகிய, ஆரோக்கிய மான, சிவந்த குழநதை களைப் பெற்றெடுப் பதற்கு வெற்றிலை யுடன் குங்குமப் பூவைச சுவைப்பர். இது எமது அன்றைய பெண்க ளின் அனுபவமாகும்.

ஆடு, மாடு போன்ற வளர்ப்புப் பிராணிக ளுக்கு இரை செமிபாட டையாத வேளைகளில் வெற்றிலையுடன் மிளகு அரைத்து ஊட்டிவிடக் குணம் காணும். சித்தி ரைப் புதுவருடப் பிறப் பின்போது வெற்றிலைக கிருக்கும் மதிப்பே தனியானது. கைவி ஷேசம் (கைவியளம்) பரிமாறுவதற்கு வெற்றிலை அவசியம் தேவையாகும். சைவத் தமிழ் மக்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு முதலில் வாங்கு வது வெற்றிலையையே. வெற்றிலை யில் வைத்து கைவியளம் பரிமாறுவ தால் வருடம் முழுவதும் செலவம் அள்ளிச் சொரியும் என்பது மக் களது தனி நம்பிக்கையாகும்.

> *பண்டிகை மற்றும் பெரு விழாக் காலங்களில் தமிழ் மக்களின் அன்றைய வாழ்விய லுடன் சம்பந்தப்பட்ட சிறப்புக் குரியவற்றை இளம் சந்ததி யினருக்கு உதயன் ஊடாக அறிமுகம் செய்து வைப்பவர் மூத்த பத்திரிகையாளரும் எழுத் தாளருமான செல்லப்பா நடராசா.*
>
> *அத்தகைய சிறப்புத் தொடர் களில் ஒன்றான இக்கட்டுரை, வெற்றிலையையும் அதன் பல் வேறு பயன்களையும் தருகிறது.*

குலவேறுபாடுகள் யாழ்ப்பாணத் தில் மலிந்திருந்த ஒரு காலத்தில்கூட சமூகத்தில் உயர் சாதிக்காரர் எனக் கூறப்பட்ட ஒருவரது வீட்டுக் கலியா ணததுக்கு அவரது பகுதிவாழ் குடி மக்களுக்கு வீடுதேடிச் சென்று வெற் றிலை வைத்து அழைப்பது வழக்க மாக இருந்தது. இவ்விதம் அவர் இவர் களையும் இவர்கள் அவரையும் வெற் றிலை வைத்து கௌரவமான முறையில வைபவங்களுக்கு அழைப்பது அந்தக் கால யாழ்ப்பாண வாழ்வியல்பாக இருந்தது.

## வந்தாரை வரவேற்பது வெற்றிலைத் தட்டமே

இன்றைய அழைப்புகள் எல்லாம் கலியாணப் பத்திரிகையை அச்சடித்துக் கொடுப்பதுடன் மட்டும் நின்றுவிடுகின்றன.

வீடுகள் தோறும் வெற்றிலைத் தட்டம் நாளாந்தம் பாவனையிலிருந்த காலம் ஒன்றிருந்தது. வீட்டிற்குவரும் விருந்தினர்களை முதலில் வெற்றிலை கொடுத்து உபசரிப்பதே சைவத்தமிழ் மக்களது பண்டைய வாழ்வியல்பா கும். வெற்றிலைத்தட்டம் தமிழர்கள் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக் கும். விருந்தினர்கள் வந்தவுடன் அவர்களை அழைத்து அமரச் சொல்லி விட்டு முதலில் நீட்டப்படுவது வெற் றிலைத் தட்டம்தான். இன்று இந்த வழமையைக்காண முடிவதில்லை யாயினும் மங்கல, அமங்கல நிகழ் வுகள் இதற்கு விதிவிலக்காக உள் ளன.

**உயர் கௌரவம்**

வெற்றிலை கொடுத்து ஒருவரை வரவேற்பது அவருக்குக் கொடுக்கப் படும் அதிஉயர் கௌரவமாகும். ஜனா திபதி, பிரதமமந்திரி போன்ற பிர முகர்கள் தென்னிலங்கையில் உள்ள கிராமங்களுக்கு வருகை தருகையில் அவர்கள் கிராம மக்களால் முதலில் வெற்றிலை கொடுத்தே வரவேற்கப்படு வது இன்றும் காணப்படும் வழமை யாகும். உறவினர் ஒருவரது வீட்டிற்கு இன்னோர் உறவினர் மிக நீண்ட கால மாக வராதுவிடின் வழிதெருவில் முத லாமவர் இரண்டாமவரைச் சந்தர்ப்ப வசமாகப் பார்க்க நேரிடுகையில் "வெற் றிலை.வைத்து அழைக்காது விட்டால் நீங்கள் எங்கள் வீடுகளுக்கு வரமாட் டீர்களாக்கும்" எனப் பேச்சுவழக்கில் உரையாடுவதைக் கிராமங்களில் இன்றும் காணமுடியும்.

வழிபாடுகளில் இதயமாகப் பாவனை செய்து ஆண்டவனுக்குச் சமர்ப்பிக் கப்படும் வெற்றிலை மருத்துவ நோக் கில் அதிசக்தி வாய்ந்த மூலிகையா கக் கணிக்கப்படும் அதேவேளை, சமூ கங்களிடையே குலபேதங்களைக களைந்து ஒருவரை ஒருவர் சமமாக மதித்த வரலாற்றுச் சிறப்பையும் கொண்டது. சைவத்தமிழ் மக்களது வாழ்வியல்புகளில் இரண்டறக் கலந்து விட்ட வெற்றிலை இயற்கை அன்னை யின் சிறப்பு மிக்கப் படைப்புகளில் ஒன்றாகும். ☆

செல்லப்பா நடராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர் – 2004


அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், அனைவருக்கும் எம் இதயம்கனிந்த சித்திரைப்புதுவருட நல்வாழ்த்துக்கள்!

உங்களுக்கு வேண்டிய
- ★ அழகு சாதனப் பொருள்கள்
- ★ அன்பளிப்புப் பொருள்கள்
- ★ இலத்திரனியல் பொருள்கள்
- ★ மின்சாரப் பொருள்கள்
- ★ வீட்டுப்பாவனைப் பொருள்கள்

- ★ Dealers in fancy goods
- ★ Giff items
- ★ Electronics
- ★ Electrical & House Hold goods

இத்தனையும் மொத்தகமாகவும், சில்லறையாகவும், ஓரிடமாகப் பெற்றிட.....

**MAYOORA GIFT CENTRE** மயூரா அன்பளிப்பு அகம்

14 நவீன சந்தை (வெளிப்புறம்) மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 021 222 2084

14, New Market (out side), power House Road, Jaffna. T.el: 021 222 2084

(C/34855)



அனைவருக்கும் எமது சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

கல்யாணப் பட்டுப்புடைவைகளின் முதல்தர கைராசி நிறுவனம்

**புதிய ராசி சில்க்ஸ்**

70, 71, நவீன சந்தை(உட்புறம்) யாழ்ப்பாணம்.

★ திருமண முகூர்த்தப் பட்டுப் புடைவைகள் ★ சோளி கிற் ★ சேட்டிங் ★ சேட் வகைகள் ★ ஸ்கேட் & பிளவுஸ் ★ கவுண் ★ சல்வார் கிற் ★ இந்தியன் சாறி வகைகள் ★ பேபி சூட் ★ சிறுவர் சிறுமியருக்கு ஏற்ற றெடிமேற் ஆடைகள்

மற்றும் அனைத்து ஜவுளித் தெரிவுகளுக்கும் வருகை தாருங்கள்:

**நல்லி சில்க்ஸ்**

121/1,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-32661)



அனைவருக்கும் எமது இனிய சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

றேடியோ 2 in 1 Set's, HI - FI Amplifier's, T.V.Deck மற்றும் அனைத்து விதமான எலக்ரோனிக் சாதனங்களையும் சிறந்த முறையில் திருத்திப் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

**T.C. ELECTRONICS**

254, ஸ்ரான்லி வீதி (ஸ்ரீதர் சினிமா முன்பாக), யாழ்ப்பாணம்.

(C/33405)(40)



எமது அன்பர்கள்,நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்.

SILVER SHIELD SOCKS

குழந்தை முதல் பெரியோர் வரை சகலருக்கும் COTTON & NYLON SOCKS பாடசாலை மாணவர்களுக்கேற்ற SOCKS & STOKINGS, விளையாட்டு வீரர்களுக்கு ஏற்ற சொக்ஸ் வகைகள் எதுவானாலும்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

★ விரைவானது ★ பாதுகாப்பானது ★ நம்பமானது

இப்போது உலகின் எப்பாகத்திலிருந்தும் யாழ் குடாநாட்டிலுள்ள MMBL உபமுகவர்களினூடாக பணத்தை மிகத்துரிதமாக பெற்றுக்கொள்ளலாம்.

- பணம் பெறுவதற்கு வங்கிக்கு போகத் தேவையில்லை
- வங்கிக்கணக்கு அவசியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களுடன் எம்மை நாடுங்கள்.

**SRI MURUGAN COMMUNICATION**

NO: 303, K.K.S. ROAD, JAFFNA. T.P. : 021 22 5392



அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

VICTORY LEAF SPRINGS Auto Filters SATHAS MOTORS & HARDWARES

யாழ்ப்பாணத்தில் சேவையிலீடுபட்டிருக்கும் ஊர்திகளின் உதிரிப்பாகங்களை நிதான விலையில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**சதாஸ் மோட்டோர்ஸ் & ஹாட்வெயர்ஸ்**

56/2, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

☎ 222 2522.

(C/32543)



தேர்தலில் சூட்டிய வெற்றி எதிர்கொள்ளப் போகும் சமாதான முன்னெடுப்பிலும் வலுப்பெற எம்மவர் அனைவருக்கும் இனிய சித்திரைப் புதுவருட நல்வாழ்த்துக்கள்!

உன்னத கலைநயம் மிக்க நகைகளை உங்கள் எழில் மிகு வளம்பெற.....

அதிநவீன மோஸ்தர்களிலான நகைகளுக்கு......

**சிறி சிவாஞ்சனா நகையகம்** தங்க நகை வியாபாரம்



149A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ☎ 012-2225481 176/01. நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

மென்மைக்கு மெருகேற்றும்.... இளமைக்கு எழிலூட்டும்.... ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்துகொடுக்கப்படும்.

(சி-34357)(30)



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தம்மினிய முதலாவது சித்திரைப் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சிகொள்கிறது.

**அரவிந்தன் நகை மாடம்** தங்கை நகை வியாபாரம்

1/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 077-8070670

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதத்துடன் தங்க நகைகளை செய்து பெற்றுக்கொள்ளலாம்.

நவீன மோஸ்தர்களில் ஓடர் நகைகளை குறித்த தவணையில் கொடுக்கப்படும்...

(சி-34352)(30)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன் சித்திரைப் புத்தாண்டுச் சிறப்பு மலர் — 2004

# இன்பம் மலர்ந்து துன்பம் விலக இனித்திடும் புத்தாண்டே வருக!

இன்று தாரண வருஷம் பிறந்து விட்டது. இந்த வருஷம் தமிழ்மக்களுக்கு ஒரு நிரந்தரமான விடிவை, நிம்மதியான ஒரு விடுதலையை, சுபிட்சமான ஒரு சுக வாழ்வைத் தரும் என்ற நம்பிக்கையுடன் வரவேற்கப்படுகிறது. அமைதியான சமாதானத்தையும் உண்மையான ஒற்றுமையையும் எதிர்பார்த்திருந்தவர்களுக்கு பிறந்திருக்கும் புத்தாண்டு நம்பிக்கையூட்டுவதாக மலர்ந்திருப்பது அனைவருக்கும் சந்தோஷத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கின்றது.

**புத்துணர்வு தரும் புத்தாண்டு**

இற்றை நாள் வரைபட்ட துன்பங்கள், துயரங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல அழிந்தொழிந்து போகவும் தொல்லைகளற்ற, பயமற்ற, உயிராபத்தில்லாத நல்ல வாழ்வு நாம் வாழப்போகின்றோம் என்ற எதிர்பார்ப்பு மக்கள் மனதிலே புத்துணர்ச்சியையூட்டுவதாகவும் புத்தாண்டு பிறந்திருக்கிறது.

எல்லோரது முகத்திலும் மங்களம் நிறைந்த நம்பிக்கைக் கீற்றுத் தென்படுகிறது. அனைவரது உள்ளத்திலும் எதிர்பார்ப்பின் ஒளிச்சுடர் நன்கு பிரகாசித்து மலர்ந்த கள்ளமற்ற வெளிப்பாடு தெரிகிறது. வாழ்க்கையில் இனிமேலாவது பயம் விலகி, சுற்றத்தவர்களுடன் ஒன்றுபட்டு உண்டு மகிழலாம் என்ற எண்ணம் வானளாவ வளர்ந்து விஸ்வரூபமாகத் தலையெடுத்திருக்கிறது.

தாம் பெற்ற பிள்ளைச் செல்வங்கள் கல்வியில் நல்ல வளர்ச்சியடைந்து மேன்மையுற்றுத் திகழ்வார்கள் என்றும் எதிர்காலத்தில் எல்லோராலும் நன்கு மதிக்கப்படுகின்ற நற்பிரஜைகளாக உருவெடுப்பார்கள் என்றும் உள்ளத்தில் எண்ணம் தலைதூக்க அனைத்துப் பெற்றோர்களும் அகமகிழ்ந்து அதிகாலையிலேயே எழுந்து ஆதவனை வணங்கி வாசலைக் கூட்டிப்பெருக்கி பசுஞ்சாணத்தினால் மெழுகி மாக்கோலமிட்டு மகிழ்வுறுவதைக் காணக் கூடியதாகவிருக்கிறது.

**இன்பப் பெருவாழ்வு**

ஆலயங்கள் தோறும் கண்டாமணியானது "டாண் டூாண்" என்று கம்பீர ஓசை எழுப்பி மக்கள் மனதில் தெய்வீகம் கலந்த ஓர் உத்வேகத்தைக் கிளப்பிவிடுகிறது. இன்பக் கிளுகிளுப்புடன் முகத்தில் ஒரு தேஜஸ் படர தமது கடமைகளைச் சுறுசுறுப்புடன் செய்யத் தொடங்கி விட்டார்கள்.

தமது இலட்சியங்கள், தங்கள் குறிக்கோள்கள், தங்களுடைய நோக்கங்கள் நிறைவேறப்போகின்ற மகிழ்ச்சி எல்லோர் மனத்திலும் துள்ளிக் குதித்த வண்ணம் தாண்டவமாடுகின்றது. மட்டற்ற மகிழ்ச்சி நிறைந்த எல்லையில்லாத இன்பப் பெருவாழ்வு வாழப் போகின்றோம் என்ற சந்தோஷத்தில் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்காக சுற்றத்தவர்களை நாடிப் புறப்பட்டுவிட்டார்கள்.

**திருவரன்**

**மகிழ்ச்சியான நிகழ்ச்சி**

எல்லாம்வல்ல பரம்பொருளாக விளங்குகின்ற இறைவன் தமது கிருபாகடாட்சத்தினால் எல்லோருக்கும் மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளையே அருளுகின்றான்; அருளுவான் என்று இறைவழிபாட்டுடன் புத்தாண்டு தினத்தில் கடவுள் கருணையும எதிர் பார்க்கப்படுகிறது. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த உலக இயக்கத்துக்கும் காரணகர்த்தாவாக விளங்குகின்ற சூரியதேவன் தன் இனிய கதிர்களைப் பரப்பியவண்ணம் கிழக்கு வானிலே உதிக்கின்றான். அந்த ஞாயிறு என்கின்ற ஆதவன் அதாவது உதயன் எல்லோரும் இன்ப வாழ்வுக்குத் தயாராகுங்கள் என்ற நோக்கில் சுடர்ஒளி பரப்பி வணக்கத்துக் குரியவனாகக் காட்சி தருகின்றான்.

**தித்திப்புக் கலந்த தின்பண்டம்**

என்னே அதிசயம்! என்னே அற்புதம்!

இன்றைய புத்தாண்டுதினக் குதூகலக் கொண்டாட்டம் தொடர்ந்து நிலைபெற்றுத் துலங்க வேண்டுமென்று விருப்புடன் மக்கள் தமது வாழ்நாளை ஆரம்பிக்கின்றனர். மூலிகை கலந்து தயாரித்த மருத்துநீர் தேய்த்து நீராடி புத்தாடையணிந்து ஆலயதரிசனசெய்து, கைவிஷேம் பரிமாறி மகிழ்வார்கள்.

தமது சொந்த பந்தங்களுடன் உறவுகள் நிலைக்க வேண்டும் என்பதற்காக இனிப்பு நிறைந்த தித்திப்பான பண்டங்களை உண்டு மகிழ்வர்.

**நல்லதோர் விடிவு**

பழையன கழிந்து புதியன புக வேண்டும் என்ற நோக்கில் முன்னைய சம்பவங்களை மறந்து, இனிமேல் நாங்கள் இன்பம் நிறைந்த சமாதான சுகவாழ்வு வாழ்வோம் என்று திடசங்கற்பம் எடுத்துக் கொண்டு மக்கள் குதூகலத்துடன் சூரியனுக்குப் பொங்கிப் படைத்து ஆராதிப்பர்.

அவர்களது நம்பிக்கை வீண் போகமாட்டாது என்பதைப் பறைசாற்றுமுகமாக பொங்கற்பானை பொங்கிச் சரியும் போது கிழக்குப் பக்கம் நோக்கி வீழ்ந்து கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்றபடி உண்மையை உறுதிபடச் செய்கின்றது. இதனால், ஆண்டவனின் அருட்பார்வை நமக்குக் கிடைத்துவிட்டபடியால் நல்லதோர் விடிவு வரப்போகின்றது என்ற மகிழ்ச்சியான சாயல் மக்களில் படரத் தொடங்கிற்று.

இன்று பிறந்திருக்கும் தாரண வருஷம் மங்களகரமான நிகழ்வுகளுக்கு வித்திட்டு, மகிழ்ச்சியான நிகழ்ச்சிகளுக்கு நீரூற்றி வளர்த்த பெருவிருட்சம் போல இன்ப நிழல் பரப்பி வாழ்வில் வசந்தத்தை உற்பவிக்கப் போகிறது என்று கூறுவது சாலப் பொருந்தும்.

போரோய்ந்து அமைதி நிலவி சுபிட்சம் மலர எல்லாம் வல்ல பரங்கருணைத் தடங்கடலாக விளங்குகின்ற பரம் பொருளான அந்த இறைவனின் பேரருட் கருணைத் திறனுக் குப் பாத்திரமாகி இன்பக் கடலில் மூழ்கித் திளைக்க அவனருளையே நாடி நிற்போமாக!



வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
அனைவருக்கும்
எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்

இன்றைய நவநாகரிகத்தின்
மகத்தான
புடைவைத் தினுசுகளுக்கு
ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
கிளை: யோகாஸ்
18A, நவீன சந்தை, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ்-கொழும்பு- யாழ்.துரித வான் சேவை. விரும்பிய இடத்தில் ஏற்றியும் இறக்கியும் பாதுகாப்பான பயணத்துக்கு
யோகாஸ் ரவல்ஸ்

18A,New Market,
Power House Road,
Jaffna.
BRANCH:
17,New Market,
(upstairs) Jaffna.
(C/34310)
Tel. 021 2223918. 021 2225679
0777 273799, 0777 222476
0777 252165, 0777 252166
Res : 060 2213454



இன்று பிறந்துள்ள சித்திரைப் புத்தாண்டில்
எமது அன்பர்கள், நண்பர்கள், மாணவர்கள் மற்றும் அனைவருக்கும்
எமது புதுவருட நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.
SKY COMPUTER SYSTEMS
109,Kandy Road, Chundikuli, Jaffna.
Tel/Fax No. 021-4590325
(கச்சேரிக்கு அருகில்)

MS Office · Photoshop
Page maker · CoreIDRAW
Hardware · AUTO CAD
Visual Basic · C/C++ Programming
Internet & E-Mail · Advanced Excel
Computerised Accounting Packages

Note:
1. மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியான முறையில் கவனிக்கப்படுவர்.
2. உங்களுக்கு வசதியான நேரத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.
- சான்றிதழ்கள் யாவும் கொழும்பு தலைமைக் காரியாலத்திலிருந்து பெற்றுத் தரப்படும்.
- 15,000/= இலிருந்து கணனிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
மொனிட்டர் 15" - 6000/= (மோத உத்தரவாதம்)
(15நாள்கள் இலவசவகுப்பு)
E.mail : skycom@wow.lk
(C/34320)
Today you learn, Tomorrow you Lead.



இனிய புத்தாண்டு நன்னாளில்
அனைவருக்கும்
